48

யாழ். - 30/=
வன்னி - 20/=

மேகமூட்டம்/ மழை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உதயன்

சுடர்: 29 கதிர்: 334 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 9, ஞாயிறு 26.10.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



சாவை நாடும் பட்டினித் துயர்

பக்கம் 10

# பட்டிக்காட்டானின் பட்ஜெட் எப்படி?

## எதிர்க்கட்சியினரை சீண்டிய மஹிந்த

கொழும்பு, ஒக். 26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு-செலவுத் திட்ட உரையின் இறுதியில் எதிர்க்கட்சியினரைப் பார்த்து, பட்டிக்காட்டானின் பட்ஜெட் எப்படி இருக்கின்றது என்று புன்முறுவலுடன் கேள்வி எழுப்பி விட்டுச் சபையிலிருந்து வெளியேறியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது சில சுவாரஷ்யமான சம்பவங்களும் அரங்கேறியிருந்தன.

திமஅபிவிருத்தியைப்பற்றிய ஜனாதிபதி, அவற்றைக் காட்டு யானைகள் துவம்சம் செய்வதாகவும் அதனை தடுப்ப

21 ஆம் பக்கம் பார்க்க



## வடக்கு - கிழக்கில் சீரற்ற காலநிலை

யாழ்ப்பாணம், ஒக். 26

காங்கேசன்துறை முதல் திருகோணமலை வரையிலான கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்று எதிர்வு கூறியுள்ள

21 ஆம் பக்கம் பார்க்க

# ஏமாறத் தயாரில்லை

## மஹிந்தவின் அழைப்புக்குச் சம்பந்தன் பதில்

கொழும்பு, ஒக்ரோபர் 26

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசுடன் இணைந்து ஆக்கபூர்வமான - விசுவாசமான - நேர்மையான - தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய பேச்சு நடத்தி நிரந்தரத் தீர்வைக் காண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தயாராகவே இருக்கின்றது. ஆனால், அரசுடன் இணைந்து தீர்வுக்கான பயனற்ற - விசுவாசமற்ற பேச்சு நடத்தி நாம் ஏமாறத் தயாரில்லை."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மட்டும் எமக்கு



அழைப்பு விடுக்காமல் நல்லிணக்கத்துக்கான தனது விருப்பங்களைச் செயல் வடிவிலும் காட்டவேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் வலியுறுத்தினார்.

மாகாண சபைகளை மக்கள் அனைவரினதும் அபிவிருத்திக்கு இன்னும் அர்த்தமுள்ளதாக மாற்றுவதற்குச் சிந்தனை ரீதியான கொள்கைகளை விட்டு யதார்த்தபூர்வமான அரசியல் யோசனைகளுடன் அரசுடன் இணைந்து பணியாற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றியபோது பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியால் என் மனைவியும் ஏமாற்றப்பட்டார்

கொழும்பு, ஒக்.26

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் ஆசிரியையான எனது மனைவியும் ஏமாற்றப்பட்டு விட்டார் என்று ஜனநாயக தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே

21 ஆம் பக்கம் பார்க்க

## பியர் போத்தல்களுடன் யாழ்ப்பாண இளைஞர்

### சர்வமதக்குழுவினர் கவலை

யாழ்ப்பாணம்.ஒக். 26

யாழ்.மாவட்டத்தில் இளைஞர்கள் பியர் போத்தல்களுடனும் பெண்கள் பாதுகாப்பில்லாத நிலையிலுமே தற்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம். மாற்று நடவடிக்கைகளை யார் மேற்கொள்வது என்பதைத் திட்டமிடவேண்டும் என்று சர்வமதக் குழுவின் மாதாந்த ஒன்று கூடலின்போது அதன் பிரதிநிதிகள் கேள்வியெழுப்பினர்.

யாழ்.மாவட்ட சர்வமதக் குழுவின் மாதாந்தக் கலந்துரையாடல் நேற்று யாழ்.கிறிஸ்துராசா தேவாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது யாழ்.மாவட்டத்தில் சர்வமதத்தினரும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துப்பகிர்வு இடம்பெற்றது.

21 ஆம் பக்கம் பார்க்க

# மோடியை டில்லியில் சந்திக்கின்றார் விக்கி

## நவம்பரில் நடைபெற ஏற்பாடுகள்

கொழும்பு, ஒக். 26

தமிழகத்துக்கு அடுத்தமாதம் பயணம் மேற்கொள்ளும் வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி

21 ஆம் பக்கம் பார்க்க



## வங்கிகளிலும் போலியான நாணயத்தாளா?



யாழ்ப்பாணம், ஒக்.26

நெல்லியடியில் உள்ள வங்கி ஒன்றிலிருந்து போலியான பணத்தாள்கள் தனக்கு வழங்கப்பட்டுள்ளதாக வங்கி

21 ஆம் பக்கம் பார்க்க

# இந்த மாதம் மட்டும் 114 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், ஒக். 26

இந்த மாதம் இதுவரையான 25 நாள்களில் 114 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த மாதத்தை விட அதிகரித்துள்ளது. மழைகாலமாகையால் தீவிரமாகப் பரவுகிறது என்று சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் தலா 148 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டனர். அடுத்த இரண்டு மாதங்களிலும் குறைவடைந்து இந்தமாதம் அது மீண்டும் அதிகரித்துள்ளது. வடக்கில் யாழ்.மாவட்டத்திலேயே இந்த அதிகரிப்புக் காணப்படுகின்றது. மன்னாரில் இந்த மாதம் இதுவரை 39 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஏனைய மாவட்டங்களில் 5 இற்கும் குறைவான அளவிலேயே தொற்று எண்ணிக்கை காணப்படுகிறது. இந்த வருடம் இதுவரையான காலப்பகுதிவரை 999 பேர் டெங்கினால் தொற்

21 ஆம் பக்கம் பார்க்க

# போரின் வடுவான வடக்கு பட்ஜெட்டில் புறக்கணிப்பு

## சரவணபவன் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 26

'தடுத்துநிறுத்தமுடியாத இலங்கை' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள 2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டமானது போரினால் மிக மோசமாகப் பாதிக் கப்பட்டு அன்றாட வாழ்க்கைக்கு முன்




னெடுக்கத் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கும் மக்களை அதிகளவில் கொண்டதான வடபகுதியை விசேடமான பிரதேசமாக கவனத்திற்கொள்ளாமையானது அப்பகுதி மக்களைப் பிரதிநிதித்துவம் செய்

21 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு கூட்டமைப்பினர் பங்கேற்பு

## ஜனாதிபதியின் தேநீர் விருந்தில்



கொழும்பு, ஒக். 26

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தில் எதிர்க்கட்சிகள் உள்ளிட்ட பல கட்சிகள் பங்கேற்கவில்லை. ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதில் பங்கெடுத்துள்ளனர்.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பித்திருந்தார்.

வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தேநீர் விருந்துபசாரமொன்றை ஜனாதிபதி வழங்குவது வழமையாகும். இந்தத் தேநீர் விருந்துபசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி மற்றும் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விருந்துபசாரத்தில் கலந்து கொண்டுள்ளது. இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மிகநெருக்கமாக நின்று கலந்துரையாடி ஒளிப்படங்கள் எடுத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# கமலேஷ் சர்மா இன்று யாழ்ப்பாணம் வருகை



கொழும்பு, ஒக். 26

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா யாழ்ப்பாணத்துக்கு இன்று இரண்டாவது தடவையாகவும் வருகிறார்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா 5 நாள்கள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வருகை தந்துள்ளார். இவர் இன்று ஞாயிற்றுக்கிழமை வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு வடக்குக்கு முதல் தடவையாகப் பயணம் செய்திருந்த அவர், 3 வருடங்களின் பின்னர் இன்று மீளவும் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வடக்கின் நிலைமைகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் அவர் நேரில் கண்டறியவுள்ளார். இந்தப் பயணத்தின் போது, பொதுநலவாய அமைப்பின் தற்போதைய தலைவரான மஹிந்த ராஜபக்ஷவிடம் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த பொதுநலவாய அமைப்பின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் - தீர்மானங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தற்போது வரை உள்ள முன்னேற்றங்கள் குறித்தும் பேசவுள்ளார்.

அத்துடன் போரின் பின்னர் இலங்கையில் மனித உரிமைகள் விடயத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்தும் அவர் ஆராய்வார். வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோரையும், இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர், தேர்தல் ஆணையாளர் ஆகியோரையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துக்கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தக் கூடாதென்று பல நாடுகளும் வலியுறுத்திய போதும், இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர் கமலேஷ் சர்மா என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# விபத்துக்குப் பின் சபைக்கு ஊன்றுகோலுடன் அஜித் எம்.பி.



கொழும்பு, ஒக். 26

வாகன விபத்தில் சிக்கி ஒரு காலை இழந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப் பெரும நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன காலமானதையடுத்து நாடாளுமன்றத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்திற்கு அஜித் மன்னப் பெரும நியமிக்கப்பட்டிருந்தார். இவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாகன விபத்தில் சிக்கி ஒரு காலை இழந்ததுடன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிறிது காலம் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதியினால் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பித்த சமயம் சபைக்கு சமுகமளித்தார்.

இருபக்க ஊன்றுகோலுடன் சபைக்குள் நுழைந்த அவரை ஆளும் - எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருகில் சென்று அவரைத் தாங்கிச் சபையின் பின்வரிசை ஆசனமொன்றில் அமரவைத்தனர்.

இதன் பின்னர் அவர் அதே ஆசனத்தில் அமர்ந்தவாறே ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரையைச் செவிமடுத்தார். (ஓ-10)

# வயோதிபர் கொலை மூவர் கைது

கொழும்பு, ஒக் 26

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூட்வீல் தோட்டம் பிரேமோர் பிரிவில், 60 வயதான வயோதிபர் ஒருவர், நேற்று முன் தினம் இரவு தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் 3 பேரைக் கைது செய்துள்ளதாக அக்கரப்பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேமோர் பிரிவிலுள்ள, உயிரிழந்த நபரின் வீட்டில் வைத்து நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையான பிச்சமுத்து முத்துசாமி என அடையாளம் காணப்பட்டுள்ளார். (த-சி)

# காணி அபகரிப்பு தொடர்பில் மன்னாரில் கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 26

மன்னார் மாவட்டத்தில் அரச - தனியார் மற்றும் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பல காணிகள், சுயநலம் கொண்ட மற்றும் அரசியல் பலம் படைத்த தனிநபர்களினால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அபகரிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில், கொழும்பு அரசின் அரசியல் பின்னணியைக் கொண்டவர்களால் பல்வேறு காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதனால், மன்னார் வாழ் மக்களின் தற்கால மற்றும் எதிர்கால இருப்பு பாதிப்புக்குள்ளாகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாகப் பழைய இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஒதுக்கப்பட்ட காணி (டிப்போ), தலைமன்னார், எழுத்தூர், சந்தியில் அமைந்திருக்கும் நகரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணி, இசைமாலைத்தாழ்வு காணி போன்றன இவ்வாறு அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது தொடர்பான கலந்துரையாடல்களில் கலந்து கருத்துக்களைத் தெரிவித்து எதிர்காலச் சந்ததியினரின் இருப்பைப் பாதுகாக்க வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல், மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (த-5)



கிளிநொச்சி மாவட்டத்துக்கான தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. தேர்தல் அலுவலகத்தை தேர்தல்கள் ஆணையாளர்நாயகம் மஹிந்த தேசபிரிய திறந்து வைத்தார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் செயலகம் முன்னர் இயங்கிய கட்டடத் தொகுதியில் தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.முகமட், வட மாகாணத் தேர்தல் ஆணையாளர் நமீல், மேலதிக அரச அதிபர் சிறீனிவாசன், உதவி தேர்தல் ஆணையாளர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், தேர்தல் அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-55-18)

# வடக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களுக்கான ஒன்றியம் விரைவில்

## மாகாண அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

மன்னார், ஒக். 26

வடக்கு மாகாணத்துக்கான தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களுக்கான ஒன்றியம் விரைவில் அமைக்கப்படும் என வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வடக்கு மாகாணத்துக்கான தனியார் பஸ் உரிமையாளர்களின் ஒன்றியம் ஒன்று அமைப்பது தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சின் உப அலுவலகத்தில் இடம் பெற்றது.

மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களின்தும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு ஒவ்வொரு மாவட்டச் சங்கங்களும் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இருந்தும் இந்த விசேட ஒன்று கூடலில் வவுனியா மாவட்டச் சங்கம் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-56)

# விபத்துகள்

தனங்களப்பு

## விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 26

நாவற்குழி தனங்களப்பில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகம் சுந்தரமூர்த்தி (வயது- 54) என்பவரே உயிரிழந்தார்.

மதியம் ஒரு மணியளவில் வீதியில் சென்றுகொண்டிருந்த அவரை ஹன்ரர் வாகனம் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் அவர் உயிரிழந்தார். அது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

## 3 விபத்துக்களில் மூவர் சாவு

நாடளாவிய ரீதியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் காரியாலயம் அறிவித்துள்ளது.

கொச்சிக்கடை தளுவாகொட்டுவ என்னுமிடத்தில் வீதியை கடக்க முயன்ற 64 வயதான நபர் மீது கார் மோதியதில் அவர், ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வெலிவேரியவில் ஓட்டோ மதிலில் மோதியதில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, மீரிகம கொடதெனியாவ ஹல்பே என்னுமிடத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். (த)

தலவாக்கலை

## பஸ் விபத்தில் 15 பேர் காயம்

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்ஜின் பிரதேசத்திலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற தனியார் பஸ் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் அகரகந்தை தோட்ட பகுதியில் வீதியை விட்டு விலகி 25 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக் குள்ளாகியது. அதில் பயணித்த 15 பேர் காயமடைந்த நிலையில், லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பஸ் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ் விபத்து நேர்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு

## வாகனம் மோதி ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் காலை நடந்த விபத்தில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த அரசரெத்தினம் (வயது-56) என்பவரே காயமடைந்தவராவார்.

குறித்த நபர் வீதியைக் கடக்க முயன்றபோது வீதியில் பயணித்த பஜிரோ ரக வாகனம் அவரை மோதியுள்ளது. (ற)

# தமிழினப் படுகொலையை விசாரிக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்ற தடையேதுமில்லை

## தமிழ் சிவில் சமூகத்தினர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26
இனப் படுகொலையில் இருந்து தமிழர்களைப் பாதுகாக்க சர்வதேச தலையீட்டைக் கோரும் தீர்மானம் ஒன்றை வட மாகாண சபை நிறைவேற்றுவதற்குச் சட்ட ரீதியிலான எந்தத் தடைகளும் இல்லை என்று கருதுவதாக தமிழ் சிவில் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் மீது கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் மேற்கொள்ளப்படுவது இனப்படுகொலையே என்பதை வெளிப்படுத்தவும் இனப் படுகொலைக்கான சர்வதேச விசாரணையைக் கோரவும் வட மாகாண சபைக்குத் தடை ஒன்றும் இல்லை என்று அந்த அமைப்பு நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐ.நா இனப்படுகொலை சமவாயம், ஒரு தேசிய இன அல்லது ஒரு மதக் குழுமத்தை முற்றாக அல்லது பகுதியாக அழித்தல் இனப்படுகொலை என்று வரையறுக்கின்றது.

தமிழர் கள் ஒரு தேசிய அல்லது இனம் சார் குழும வகைக்குரியவர்கள் என்பது மறுத்துரைக்கப்பட முடியாதது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றின் ரோம் சட்டமானது இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகிய மூன்றையும் குற்றங்களாக வரையறுத்துள்ளது. தமிழர்கள் மீது நடத்தப்பட்ட மற்றும் தொடர்ந்து நடத்தப்படும் கொடுமைகளை விசாரிக்கும் எந்தவொரு விசாரணையிலும் இனப் படுகொலை உட்பட மேற்குறித்த மூன்று வகையான குற்றங்களும் விசாரிக்கப்படுதல் அவசியமானதாகும்.

போர்க்குற்றம் மற்றும் மனித குலத்துக்கெதிரான குற்றங்களுக்கு மேலதிகமாக, இனப்படுகொலைபற்றியும் விசாரிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசாரணைக் குழுவைக் கோரும் உரிமை தமிழர்களுக்கும் தமிழர்களின் பிரதிநிதிகளுக்கும் உண்டு.

மேலும் இனப் படுகொலையை விசாரிக்கக் கோருவதானது, ஏனைய குற்றங்களான போர்க்குற்றம் மற்றும் மனித குலத்துக்கெதிரான குற்றங்களை விசாரிப்பதற்கு ஐ.நா. விசாரணைக் குழுவுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தாது.

தம்மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரக் குற்றங்களை இனப்படுகொலையின் பாற்பட்டவை என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் தாமே அடையாளம் காணுதல் அது தொடர்பான விசாரணையின் பக்கச்சார்பற்ற தன்மைக்கு எந்தவிதத்திலும் குந்தகம் விளைவிக்காது.

தமிழர்களின் நலன்களை முதன்மையாகக் கொண்டு தமிழர்களும் அவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் தம்முடைய நிலைப்பாடுகளைத் தெளிவாக முன்வைக்க வேண்டும். தமது பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டுமென்பதற்காக அந்தப் பிரச்சினைகள் சார்ந்த நிலைப்பாடுகளை எடுப்பதற்கும் உரையாடல்களை தாமே முன்னெடுப்பதற்கும் அவற்றில் பங்கு கொள்வதற்குமான தார்மீக உரிமை தமிழர்களுக்கு உள்ளது.

எனவே, இனப்படுகொலையிலிருந்து தமிழர்களைப் பாதுகாக்கச் சர்வதேச தலையீட்டைக் கோரும் தீர்மானமொன்றை வட மாகாண சபை நிறைவேற்றுவதற்குத் தார்மீக ரீதியிலோ, சட்ட ரீதியிலோ எவ்வித தடைகளும் இல்லை என்று நாம் கருதுகிறோம் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## ஓய்வூதியர்கள் மதிக்கப்படவேண்டும்



யாழ்ப்பாணம். ஒக். 26
கடந்த காலங்களில் பல்வேறு இடர்காலங்களிலும் அர்ப்பணிப்பான சேவையை மக்களுக்காக வழங்கிய வங்கியாளர்கள் ஓய்வு பெற்றிருந்தாலும் அவர்களுடைய சேவைக் காலங்கள் மதிக்கப்படவேண்டும். என்று முன்னாள் பேராசிரியர் நடராஜசுந்தரம் தெரிவித்தார்.


வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஓய்வூதியர் தினமும் நேற்று யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கியின் பிராந்திய காரியாலத்தில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய புதிய தொழில்நுட்ப வளர்ச்சிகளால் வங்கிச் சேவைகள் சிரமமின்றி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் கடந்த காலங்களில் வங்கிச் சேவைகள் எவ்வாறு இருந்தன என்பதையும், வங்கியாளர்கள் எதிர்கொண்ட சிரமங்களையும் நாம் அறிந்துள்ளோம். போர்க்காலச் சூழலிலும், இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்ட காலத்திலும் வங்கியாளர்கள் தம்மை அர்ப்பணித்துச் சேவையை வழங்கியிருந்தனர்.

ஆனால் இன்று அவர்கள் ஓய்வு பெற்றிருந்தாலும் மக்கள் நலனுக்காகவும், வங்கிகளின் வளர்ச்சிக்காகவும் அவர்கள் ஆற்றிய பணிகள் நினைவு கூரப்படவேண்டியவை-என்றார்.

இந்த நிகழ்வில் சங்கத்தின் மாதாந்த சஞ்சிகை வெளியீடு மற்றும் இணையத்தள ஆரம்பம் என்பன இடம்பெற்றன. (த-14-ரி)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவியாக முத்தையன்கட்டு ஒட்டுசுட்டானைச் சேர்ந்த இராசலிங்கம் கலா என்பவருக்கு 55 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு வழங்கப்பட்டது. கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வீதம் கடந்த இரண்டு ஆண்டுகளாக கனடா நாட்டில் வாழும் ஒருவரின் உதவியுடன் பணமும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-86)

## சடலங்கள் மீட்பு

வடமராட்சி, ஒக் 26
நெல்லியடி மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நெல்லியடி கரவெட்டி கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் ஒன்று நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. கரவெட்டி கிழக்கு, காட்டுப்புலத்தைச் சேர்ந்த வேலன் சின்னப்பிள்ளை (வயது-70) என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை - பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வதிரி அல்வாய் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டதாகப் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். தேவரையாளி அல்வாயைச் சேர்ந்த மார்க்கண்டு தர்மரட்ணம் (வயது 66) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட இரு சடலங்களும் மரண விசாரணையின் பின் பிரேத பரிசோதனைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (த-109)

## மலையகத்தில் தொடரும் மழை

கண்டி.ஒக்.26
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை காரணமாக மலையகத்தில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

மலையகத்தில் மாலை வேளையிலும் இரவு வேளையிலும் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. இதனால் தோட்டத்தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை காணப் படுகிறது. (ஒ-10)

# புதுக்குடியிருப்பு கிரவல் மண் வெளியிடங்களுக்குக் கடத்தல்

## தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக் 26
புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலேயே கிரவல் மண்ணுக்கான தேவையுள்ளபோதும், அந்தப் பகுதியிலிருந்து வேறு மாவட்டங்களுக்கு கிரவல் மண் அகழ்ந்து செல்லப்படுகின்றது. இதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.



புதுக்குடியிருப்பு - கேப்பாபிலவு வீதியில் ஊடறுத்துச் செல்லும் கள்ளியடி என்ற இடத்திலிருந்து காட்டு அந்தோனியார் கோயிலுக்குச் செல்லும் பாதையில் அதிகளவு கிரவல் மண் காணப்படுகின்றது. இந்தப் பகுதியிலிருந்து கடந்த சில மாதங் களாகக் கிரவல் மண் தொடர்ச்சியாக அகழப்பட்டு வருகின்றது.

தனியார் கிரவல் மண் அகழ்வதற்குக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அரச திணைக்களமொன்றே நேரடியாக இந்தக் கிரவல் மண் அகழ்வை மேற்கொண்டு வருகின்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரும்பாலான வீதிகள் திருத்தப்படவேண்டிய நிலையில் உள்ளன. அவற்றைத் திருத்துவதற்குக் கிரவல் மண் தேவைப்படுகின்றது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கிரவல் மண் வழங்கப்படுவதில்லை. மாறாகப் புதுக்குடியிருப்பில் அகழப்படும் கிரவல் மண் வேறு மாவட்டங்களுக்கே எடுத்துச் செல்லப்படுகின்றது.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அரச காணிகளில் கிரவல் மண் காணப்படுவது குறைவு. காட்டுப் பகுதிகளிலேயே கிரவல் மண் காணப்படுகின்றது. இதனால் வன பரிபாலனத் திணைக்களத்தின் அனுமதியுடன், குறித்த அரச திணைக்களம் கிரவல் மண் அகழ்வில் ஈடுபடுகின்றது.

பிரதேசத்துக்குத் தேவையான கிரவல் மண்ணை வழங்கிய பின்னரே அதனை வெளியில் கொண்டு செல்ல வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குறித்த பிரதேசத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நேரில் சென்றுபார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 11 தங்கத் துண்டுகள் கடத்திய குடும்பத்தினருக்குத் தண்டம்

கொழும்பு, ஒக். 26
ரூபா 55 இலட்சம் பெறுமதியான 11 தங்கத் துண்டுகளைத் தங்களுடைய பயணப்பொதிகளில் வைத்துக் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவர் அடங்கிய குடும்பத்துக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 303 விமானத்திலேயே இந்தக் குடும்பத்தினர் சிங்கப்பூரிலிருந்து தங்கத்தை நேற்றுச் சனிக்கிழமை கடத்தி வந்துள்ளனர் என்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் அரசுடமையாக்கப்பட்டதுடன் அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொழும்பு கொம்பனி வீதியைச்சேர்ந்த கணவன் (வயது 31), மனைவி (வயது-28) மற்றும் மனைவியின் சகோதரி (வயது 23) ஆகியோருக்கே இவ்வாறு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (த)

# பட்ஜெட் சலுகைகளில் 50 வீதம் நிறைவேறுமா?

## பொருளாதார நிபுணர்கள் கேள்வி

கொழும்பு, ஒக். 26
ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவினால் வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சலுகைகளில் 50 சதவீதம் கூட நிறைவேற்றப்படுவது சந்தேகமே. இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையில், இந்தச் சலுகைகளை பத்திரிகை வடிவில் மாத்திரமே சொல்லமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ள பொருளாதார நிபுணர்கள், வழமைபோன்று இந்த வரவு - செலவுத் திட்டமும், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கு எந்த விசேட சலுகைகளையும் வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறும் தேர்தலை இலக்காகக் கொண்டு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் பொருளாதார வல்லுநர் முத்துக்கிருஷ்ணர் சர்வானந்தாவிடம் கேட்டபோது,

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்ட சலுகைகளில் 50 சதவீதத்தைக் கூட நிறைவேற்ற முடியுமா என்பது சந்தேகமே. இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமையில் இவ்வாறானதொரு சலுகைகளை நிறைவேற்றுவது என்பது சாத்தியமற்றதொன்று.

கடந்த காலங்களிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டங்களில் சொல்லப்பட்ட பல சலுகைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மலையக மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் அமைத்தல் என்று ஜனாதிபதியினால் சொல்லப்பட்ட சலுகை கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதேபோன்று பல்வேறு சலுகைகள் மீள மீளச் சொல்லப்பட்டு வருகின்றன. ஆனால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

அதிலும் தற்போதைய பொருளாதார நிலைமையில் இந்தச் சலுகைகளில் 50 சதவீதத்தைக் கூட நிறைவேற்றுவது சந்தேகம். இந்த வரவு - செலவுத் திட்டம் வெளிப்படையாகவே ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து வெளியிடப்பட்டிருக்கின்றது. எனவே ஜனாதிபதித் தேர்தல் வரையில் ஒரு சில சலுகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அது தொடருமா என்பது கேள்விக்குறியே.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு கடந்த கால வரவு - செலவுத்திட்டங்களைப் போல் இந்த வரவு - செலவுத் திட்டமும் எதனையும் வழங்கவில்லை. ஒட்டுமொத்த இலங்கைக்கும் வழங்கிய சலுகைகள் மாத்திரமே இங்கு கிடைக்கப் போகின்றன. போரினால் பாதிக்கப்பட்டு பின்தங்கிய பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கு எந்த விசேட நிவாரணமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. வன்னிப் பிராந்தியத்தில் 30 சதவீத மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை தற்போதும் தொடர்வதற்கு முக்கிய காரணம், வரவு - செலவுத் திட்டத்தில் போர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு எந்தவொரு விசேட சலுகைகளும் வழங்காமைதான்.

மேலும் தற்போதைய வரவு - செலவுத் திட்டம் தேர்தலை இலக்காகக் கொண்டது. ஒவ்வொரு பிராந்திய மக்களையும் கவர்வதற்காக ஒவ்வொரு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மக்களுக்கு என்னதைச் செய்தாலும் அவர்கள் தனக்கு வாக்களிக்கப் போவதில்லை என்பதை அறிந்துகொண்டுதான், ஜனாதிபதி வடக்கு - கிழக்கு மக்களுக்குத் தேவையான எந்த நிவாரணத்தையும் முன்வைக்கவில்லை. வடக்கில் அதிவேக நெடுஞ்சாலை, ரயில் பாதைப் புனரமைப்பு என்பவற்று மேலாக போர் பாதிப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும். ஆனால் அரசு, தேர்தலை இலக்காகக் கொண்டு முஸ்லிம் சமூகத்துக்கு கூடபெரியளவில் சலுகைகளை வழங்காது, பெரும் பான்மையினத்தவர்களின் வாக்குகளைக் கவர்வதற்காகவே சலுகைகளை அறிவித்துள்ளது - என்றார். (த-5)

# கொட்டித் தீர்த்த கனமழை பல இடங்களில் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஒக் 26
யாழ். நகரின் புறநகர்ப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் கொட்டித் தீர்த்த கனத்த மழையினால் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் ஏற்பட்டது.


நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, கோண்டாவில், கோப்பாய், நீர்வேலி உட்பட மற்றும் சில பிரதேசங்களில் இடியுடன் கூடிய கனத்த மழை கொட்டித் தீர்த்தது.

இந்த கடும் மழையினால் இந்தப் பிரதேசங்களில் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கியது. சுமார் ஒரு மணி நேரத்துக்கு மேலாகப் பெய்த இந்த கனத்த மழையினால் வலி. கிழக்குப் பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி காணப்பட்டன.

அத்துடன் இந்தப் பகுதியில் உள்ள தாழ்ந்த வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்பட்டது.

இதேசமயம், நல்லூர் ஆலயச் சுற்றாடலிலும் நேற்றைய மழையினால் வெள்ளம் அதிகளவில் காணப்பட்டது.

ஆலயத்தின் வடக்கு வீதியில் அதிகளவில் வெள்ளம் தேங்கிக் காணப்பட்டாலும் கூட கந்தசஷ்டி உற்சவத்தின் இரண்டாம் நாள் திருவிழாவில் முருகப் பெருமான் வீதி வலம் வந்தார். (த-17)



## பசுப்பால் பைக்கெற்று நேற்று முதல் விற்பனை

கந்தசஷ்டி காரணமாகப் பாலுக் குத் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் பைக்கெற்றுக்களில் அடைத்த சுத்திகரிக்கப்பட்ட பாலை நேற் றுத் தொடக்கம் விநியோகிக்கத் தொடங்கியுள்ளனர். தேவை யானவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங் கத் தலைவர் இ.சர்வேஸ்வரா தெரிவித்தார்.

நேற்றுத் தொடக்கம் சங்கத் தின் சுமார் 25 இற்கும் மேற் பட்ட நிலையங்களில் அவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள் ளன. அரை லீற்றர் (500 மில்லி லீற்றர்) கொண்டதாக ஒவ்வொரு பைக்கெற்றும் தயாரிக்கப்பட்டு அடைக்கப்பட்டுள்ளன. அரை லீற்றர் பால் பைக்கற்றின் விலை 40 ரூபா. பைக்கற்றுகளை 3 நாள்களுக்கு வைத்திருக்க முடியும். காலா வதி திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேவையான அளவு பால் பைக்கெற்றுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் இருந்து பெறப்பட்ட பாலே பைக்கற்று களாக அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்று சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (த-4)

70ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நீக்கிலாப்பிள்ளை செபரட்ணம் (செபம்)
70ஆவது அகவையில் காலடி பதிக்கும்
எமது அப்பாவுக்கு
எமது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
5ஆம் வட்டாரம்,
விடத்தல்தீவு, மன்னார்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
077 5445 007
(C/17245)(10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
மகிந்த சிந்தனை தேசிய
புனர்வாழ்வுத் திட்டத்தின்
கீழ் கல்வி அமைச்சினால்
06.10.2014 அன்று
பிரதீபா பிரபா விருது
பெற்ற எமது வித்தியாலய
ஆசிரியர்
திருமதி பபிதா சிறிதர்
அவர்களின் சேவை
மேன்மேலும் சிறக்க மனமார
வாழ்த்துகின்றோம்
பாடசாலை சமூகம்
மு/ஆறுமுகம் வித்தியாலயம்






Best Wishes
பாராட்டி
Congratulations
வாழ்த்துகின்றோம்
மகிந்த சிந்தனை தேசிய
புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ்
கல்வி அமைச்சினால் 06.10.2014
அன்று வழங்கப்பட்ட
பிரதீபா பிரபா
விருதினைப் பெற்ற
மு / ஒட்டுசுட்டான் ஆறுமுக
வித்தியாலய ஆசிரியை
திருமதி பபிதா சிறிதர்
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
Congratulations
உளமார வாழ்த்துவோர்:
தரம் 4 மாணவர்கள், பெற்றோர்கள்.
மு/ஆறுமுகம் வித்தியாலயம்.
(C/17219)(12.3.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வீரகத்தி நடராசா**
மலர்வு : 31.05.1946
உதிர்வு : 05.11.2013
எங்கள் அன்புத் தெய்வமே
எங்களை விட்டு மறைந்து
ஆண்டு ஒன்று ஆனாலும்
உங்கள் நினைவு என்றும்
எங்களை விட்டு நீங்காது

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**சின்னக்குட்டி சிதம்பரநாதன்**
(இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்,
குற்றப் புலனாய்வுத்துறை)(CID)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி சிதம்பரநாதன் கடந்த (25.10.2014) சனிக்கிழமை அமரராகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி- தங்கமுத்து தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான தம்பையா- மாணிக்கம் தம்பதியரின் மருமகனும் அன்னபூரணியின் அன்புக் கணவரும் ஸ்ரீரங்கன், இராகுலன், கோகுலன், தவகுலன், குருகுலன் மற்றும் காலஞ்சென்ற தனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜன்சி, தயாநிதி, சத்தியா, ராதிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கணேசன், கதிர்காம லிங்கம், பார்வதி மற்றும் தில்லைநாயகி, மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நர்த்தகி, தாரகி, விகாஷ், கிரிஷ், ஆசிகா, பிர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான குருதாசன், இலங்கைநாதன் மற்றும் இராசேஸ்வரி, கனகரத்தினம் பவானியம்மா, ஞானசுவுந்தரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி, சிவநாதன் ஆகியயோரின் சகலரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 128, 46வது ஒழுங்கை, வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி : 011 2363954
077 3561262
தகவல் : குடும்பத்தினர்.
(C/17246)(08)

# காரியசித்தி பெறவைக்கும்

# கந்தஷஷ்டி



க. குணரத்தினம்
ஆசிரியர்

**இந்த ஆண்டுக்கான கந்தஷஷ்டி விரதம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

"கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்" என்பார்கள். இதனால் கந்தனைக் கலியுகவரதன் எனவும் அழைப்பர். கந்தன் என்பது வடமொழிச் சொற்பதம். ஸ்கந்த என்ற சொல்லே தமிழில் 'கந்த' என்றாயிற்று. இந்தக் 'கந்தன்' என்ற நாமத்துடன் வழிபடுகின்ற மரபு வடநாட்டு முருக வழிபாட்டுடன் தொடர்புடையது. வடமொழியில் அமைந்த மகாபுராணங்களில் ஒன்று ஸ்கந்த புராணம். அதில் உள்ள சிவரகசிய காண்டத்தைத் தழுவியே கச்சியப்பர் தமிழில் கந்தபுராண காப்பியத்தைப் பாடியதாகக் கூறப்படுகின்றது.

கந்த புராணத்தின்படி பார்த்தால், சூரன் முதலான அவுணர் (அசுரர்)களால் தேவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு சிறைவைக்கப்பட்டு இருந்த போது, அவர்களது வேண்டுதலுக்கு இணங்க அசுரர்களை அழித்து தேவர்களுக்கு அபயம் அளிப்பதற்காக இறைவன் கந்தப் பெருமானைத் தோற்றுவித்ததாகக் கூறப்படுகின்றது. இறைவனது நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய ஆறு தீப்பொறிகளும் சரவணப் பொய்கையில் ஆறுதாமரை மலர்களில் ஆறு குழந்தைகளைத் தோற்றுவித்தன. இவர்களைக் கார்த்திகைப் பெண்கள் வளர்த்ததாகவும், பின்னர் ஒருபொழுது இறைவனும் இறைவியும் சென்று கார்த்திகேயனை மகனாக ஏற்றுக் கொண்டு தேவர் படைக்கு சேனாதிபதியாக ஆக்கியதாகவும், அதற்கமைய கந்தப் பெருமான் சூரன் முதலான அரக்கர்களைக் கொன்றொழித்து தேவர்களைக் காத்தருளினார் என்றும், இதனால் பேருவகை அடைந்த இந்திரன் தனது வளர்ப்பு மகளாகிய தெய்வயானையைக் கந்தப் பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இது கந்த புராணம் காட்டும் கந்தப் பெருமானின் திரு அவதாரம் பற்றிய செய்தி. இந்தப் புராணத்துடன் தொடர்புபட்ட வகையிலேயே "கந்த ஷஷ்டி" விரதமும் அமைந்துள்ளது. ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் பிரதமை முதல் ஷஷ்டி வரையான ஆறு தினங்கள் கந்தப் பெருமானை மனம், மொழி, மெய்களால் வழிபட்டு, பக்திபூர்வமாக விரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். இந்தக் கந்த ஷஷ்டி விரதமும், அதனோடிணைந்த கந்த புராண படனமும் எமது மரபிலே தனித்துவம் வாய்ந்த ஒன்றாகத் திகழ்கின்றது. தமிழர்களைப் பொறுத்தவரையில் கந்த ஷஷ்டி விரதத்தை எல்லோருமே அனுஷ்டிப்பார்கள். முருக வழிபாட்டுடன் தமிழர்கள் பண்டு தொட்டு ஒன்றிப்போனவர்கள் என்பது வரலாறு. இதனால்தான் தமிழர்களது வழிபாட்டு மரபில் கந்தஷஷ்டி தனியான ஓர் இடம் பிடித்துள்ளது. ஆறுமுக நாவலர் தொடக்கி வைத்த புராண படன மரபும், அதனோடிணைந்த கந்த ஷஷ்டி விரதமும், சூரன் போர் உற்சவமும் ஈழத்து முருகன் ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முருக வழிபாடு தமிழர்களிடம் மேலோங்கி இருப்பதற்கு மேலும் பல சான்றுகள் உள்ளன. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்திலேயே முருகன், மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாகப் போற்றப்பட்டான். "சேயோன் மேய மைவரை உலகம்" என்கிறது தொல்காப்பியம். சங்க இலக்கியங்களில் எல்லாம் முருகன் போற்றப்படுகின்றான். தமிழைக் கட்டிக் காத்த பெருமை எம்பெருமான் முருகவேளுக்கும் உண்டு. சங்கத்துச் சான்றோராக இருந்து முருகப் பெருமானும் தமிழை வளர்த்ததை விளம்புவதாகவே "முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கு" என்ற பாடலில் வரும் "முதல் சங்கம் உருவான மொழியானவன், இடைச் சங்கம் கவி பாட புகழானவன், கடைச் சங்க வாழ்வுக்கும் வழியானவன், கடல் கொண்டும் அழியாத தமிழானவன்" என்ற பாடல் வரிகள் அமைந்துள்ளன. சங்ககால கடைச் சங்கப் புலவர் நக்கீரர், முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருமுருகாற்றுப் படை என்ற நூலைப் பாடியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சங்க மருவிய காலத்தில் முருக வழிபாடு அழிந்து போகாது நின்று நிலை பெற்றதைச் சிலப்பதிகாரம் சாற்றுகின்றது.

*"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்*
*ஆறுமுகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்*
*நீல மேனியன் நெடியோன் கோயிலும்"*

என்ற பாடல்வரி ஆறுமுக சுவாமியாகிய முருகப் பெருமானுக்குக் கோயில் இருந்தமையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் சிவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு தேவார திருவாசகங்களை பக்தி ததும்பப் பாடியுள்ளனர். முருக வழிபாட்டுக்குத் தனித்துவமான இலக்கியங்கள் தோன்றி சான்று பகரா விட்டாலும், நாயன்மார்களின் பாடல்களில் முருகன் போற்றப்படுகின்றான் என்பதற்கு "நங்கடம்பனைப் பெற்றவன் பங்கினை" என்ற தேவாரப் பாடல் சான்றாக அமைந்துள்ளது. கடம்புமாலையை அணிந்தவன் என முருகன் போற்றப்படுகின்றான்.

சோழர் காலத்திலே முருக வழிபாடு மேலோங்கி இருந்தமையை கந்தபுராணம் பறைசாற்றி நிற்கின்றது. ஆறு காண்டங்களில் அற்புதமாக முருகப் பெருமானின் திரு அவதாரம் தொடக்கம் சூரசங்காரம், தேவர்கள் சிறைமீட்கப்பட்டமை வரையும் தத்ரூபமாக கந்தபுராணம் கூறுகின்றது. கந்தபுராண மரபு தழுவிய வாழ்வே தமிழர் வாழ்வு என்பது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் "யாழ்ப்பாணக் கலாசாரம், கந்தபுராணக் கலாசாரம்" என்ற கூற்றில் இருந்து தெளிவாகின்றது. "கந்தபுராணத்தில் இல்லாதது வேறெந்தப் புராணத்திலும் இல்லை" என்பது சைவச் சான்றோர்களின் தாரக மந்திரமாகும். தீமை செய்தவர்களையும் மன்னித்து அவர்கள் ஈடேற கருணை செய்பவன் முருகன் எனக் கூறி முருகப் பெருமானின் ஒப்பற்ற கருணைத் திறத்தைச் சொல்ல கந்தபுராணத்தில் வரும் ஒரு பாடலே போதும்

*"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை*
*ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த*
*மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள் பெற்று உய்ந்தான்"*

என்ற பாடலில் தீங்கு செய்த சூரனையே மன்னித்து, சரணாகதியென வந்த அவனை ஏற்றுக் கொண்டமையும், சூரன் அருள் பெற்று ஆன்ம ஈடேற்றம் பெற்றமையும் பாடலூடாகப் புலப்படுத்தப்படுகின்றது.

பின்னைய காலங்களிலும் தமிழரது மரபிலே முருக வழிபாடு நின்று நிலை பெற்றமைக்கு இலக்கியங்களே சான்று பகர்கின்றன. நாயக்கர் காலத்திலே வாழ்ந்த அருணகிரிநாதர் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம் போன்ற பக்தி நூல்களைப் பாடியுள்ளார். இதே காலத்தில் வாழ்ந்த குமரகுருபரரும் கந்தர் கலிவெண்பா பாடியுள்ளார்.

இவ்வாறாக கந்தன் புகழ், இனிய செந்தமிழ் இலக்கியங்களிலே பேசப்பட்டதில் இருந்து அது தமிழர்களோடும், தமிழ் மரபோடும் எவ்வாறு ஒன்றித்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. இது இன்றுவரை தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் மருவாது மாட்சியுடன் இருப்பது மன நிறைவைத் தருகின்றது.

முருகன் தமிழர் நெஞ்சங்களில் குடிகொண்ட தெய்வம் என்பதற்குக் காலமே சாட்சி சொல்லுகின்றது. அதாவது திருமுருகாற்றுப் படையை நக்கீரர் பாடுவதற்கு அருள்செய்தவன் முருகன். கச்சியப்பச் சிவாச்சாரியார், கந்தபுராணம் பாடுவதற்கு 'திகடசக்கர' என அடியெடுத்துக் கொடுத்த முருகன், அருணகிரிநாதர் திருப்புகழ் பாடுவதற்கு "முத்தைத் தரு" என அடியெடுத்துக் கொடுத்தான். திருச்செந்தூர் முருகன் ஒளவையாருக்கு சுட்டபழம் பறித்துப் போட்டு வியக்க வைத்து இடையனாய்க் காட்சியளித்து குமரனாய்க் கோலங்கொண்டு இவ்வுலகுக்கு பெரியது எது? அரியது எது? இனியது எது? கொடியது எது? என்று கூறும்படி வேண்டிக் கொண்டவன். ஏன்? கச்சியப்பர் பாடி அரங்கேற்றிய கந்த புராண காப்புச் செய்யுளில் பிழை காண முற்பட்டபோது வடமொழி இலக்கணநூலான வீரசோழியத்துடன் வந்து, இலக்கணம் கற்பித்து புலவர் பெருமக்களை வியக்க வைத்தவன் முருகன் அல்லவா?

முருகனின் திருநாமங்களில் ஒன்று ஆறுமுகன். அதாவது ஆறுதிருமுகங்களை உடையவன். முருகன் வாசம் செய்கின்ற படைவீடுகள் ஆறு. முருகனுக்கு உரிய கந்த ஷஷ்டி விரதம் ஆறுநாள்களுக்கு அனுஷ்டிக்கப்படுகிறது. முருகனின் தாரக மந்திரமான 'சரவணபவ' ஆறு அட்சரங்களைக் கொண்டது. இவ்வாறு 'ஆறு' என்ற தத்துவ ரூபமாக விளங்குகின்றான் முருகன். முருகனது பன்னிரு கரங்களும் உயிர் எழுத்து பன்னிரண்டாகவும், ஆறு முகங்களிலுமுள்ள பதினெட்டுக் கண்கள் பதினெட்டு மெய்கள் என்றும் வலது கண் ஆறு, இடது கண் ஆறு, நெற்றிக் கண் ஆறு முறையே இவை வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவைகளைக் குறிப்பதாகவும் தமிழருடன் தொடர்புபடுத்தி தத்துவம் கூறுவர்.

**முருகனின் திருநாமங்களில் ஒன்று ஆறுமுகன் அதாவது ஆறுதிரு முகங்களை உடையவன். முருகன் வாசஞ் செய்கின்ற படைவீடுகள் ஆறு. முருகனுக்கு உரிய கந்த ஷஷ்டி விரதம் ஆறுநாள் முருகனின் தாரக மந்திரமான 'சரவணபவ' ஆறு அட்சரங்களைக் கொண்டது.**

ஈழத்தைப் பொறுத்தவரை தமிழர் செறிந்து வாழுகின்ற சகல இடங்களிலும் முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன. முருகன் ஆலயங்கள் இல்லாத இடங்களே இல்லை எனலாம். யாழ்ப்பாணத்தில் நல்லூர் தொடக்கம் தென்னிலங்கையில் கதிர்காமம் வரை முருகனுக்குக் கோயில்கள். இன்னும் தமிழர்கள் வாழும் மலையகம், கொழும்பு என சகல இடங்களிலுமே முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன.

எமது தனித் தமிழ்த் தெய்வமான முருகப் பெருமானின் விரதங்களில் ஒன்றான கந்தஷஷ்டி விரதம் மகத்துவமானது. நினைத்த காரியங்களைக் கைகூடச் செய்வது. வேண்டுவார் வேண்டும் வரங்களை [illegible] வழங்கும் [illegible]யெல்லாம் வாரி [illegible] முருகனது இந்தக் கந்தஷஷ்டி விரதத்தை திரிகரண சுத்தியுடன் நோற்று முருகனது பேரருளும், தமிழின் மாட்சியும் நிலைபெற்று இருக்க கலியுக வரதனாகிய கந்தப் பெருமானின் திருவடிக் கமலங்களைப் போற்றித் துதிப்போமாக.

# விற்பனைக்கு

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள (Running Condition) NISSAN SUNNY 12 ஸ்ரீ XXXX வெள்ளைநிறக் கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 024 0892 (53495) (5.6.3)

## ஜெனரேற்றர் விற்பனைக்குண்டு

வவுனியாவில் புதிய ஜெனரேற்றர் (firman -1500w) உடன் விற்பனைக்கு
தொடர்பு: ரவி 077 8177 589 (52177) (5.6.3)

## Toyota Hiace Van விற்பனைக்கு

58-xxxx short model,
Dual A/C, Rotate seat
தொடர்பு: 077 009 3933 (53486)(5.6.3)

## உடுவிலில் வீடு, காணி விற்பனைக்கு

டச்சு வீதி, உடுவிலில் 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு.
தொடர்பு: 077 624 8771 (சி/17163) (5.6.3)

## ஓட்டோ (Auto) விற்பனைக்கு

பேக்கறிப் பாவனைக்கு உகந்த ஓட்டோ உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
(51976) (12.3.6) 077 699 1040/077 359 2236

## நல்லூரில் வீடு விற்பனைக்கு

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு சமீபமாக யாழ்.மாநகராட்சிக்கு அண்மித்துள்ள கச்சேரி நல்லூர் வீதியில் 1¼ பரப்பும் மேல் மாடி பகுதியுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்கு உள்ளது. ஆர்முள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள். (தரகர்கள் தேவையில்லை) விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 238 3080 (53553)(5.6.3)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய், பலாலி வீதி, கற்பகப்பிள்ளையார் வடக்கு வீதி ஒழுங்கையில் சைவத் தமிழ் பாடசாலை தாண்டி தெற்குப் பக்கமாக வரும் முதல் ஒழுங்கையில் 4¼ பரப்புக்காணி தனிப் பாதையுடன் விற்பனைக்குண்டு. (சி/17163)(5.6.3)
தொடர்பு: 0777 599 015
(தரகர் தேவையில்லை)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

52 நாள்கள் நிரம்பிய உயர்ந்தரக ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போடப் பட்டது.
(53046) (12.3.6) தொடர்பு: 077 755 6244

## ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

சிறந்த இன கிறிறாஷ் ஒரு நாள், இரண்டு கிழமை, ஒரு மாத, இரண்டு மாத ஊர்க் கோழிக்குஞ்சுகளும் கினிக் கோழிகளும் விற்பனைக்குள்ளன.
(சி/17230) (12.3.6) தொடர்பு: 077 755 6244

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பாம் ஸ்கூலுக்கு மேற்குப் புறத்தில் (100 யார் தூரத்துக்குள்) கலைவாணி வீதியில் 12 அடிப்பாதை கொண்ட 3 ஆவது காணி நான்கு பரப்பு(4) உடன்விற்பனைக் குண்டு. கருணாலயத் துக்கு மிக அண்மையிலுள்ளது. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:075 767 6739/077 666 0631 (46094) (5.6.3)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மணியம் தோட்டத்தில் வடக்குப் பக்கம் வீதியும் தெற்குப் பக்கம் கடற்கரை வீதியுமாக அமைந்த 5 ஏக்கர் காணி விற்பனைக்கு.
தொடர்பு : 077 899 8144 (53448) (7.6.3)

## காணியும் வீடும் விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதியில் 6¾ பரப்புக் காணியும், விசாலமான வீடும் விற்பனைக்குண்டு.
(53374) (12.3.6) தொடர்பு: 077 442 0666

## காணி விற்பனைக்கு

சுன்னாகம் மத்தி, உதவி அரசாங்க அதிபர் செயலக வீதியில் (A.G.A. Office Lane) அமைந்துள்ள "யாந்திரை" என்னும் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நல்ல குடியிருப்பு சூழலில் வீடு கட்ட உகந்த ஆதனம்.
தொடர்பு: (53350) (7.6.3)
077 129 8159

# வாடகைக்கு

## வீடு வாடகைக்குண்டு

நல்லூரில் Temple Road இல் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நல்ல பாதுகாப்பான சூழலில் புதிய Luxury house வாடகைக்கு உண்டு.
மாத வாடகை 25000/=
தொடர்பு : 077 086 5700 (53474) (7.6.3)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதி, யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் மூன்று அறையுள்ள சகல வசதியுடன் வீடும், அத்துடன் வேலை பார்க்கும் பெண்கள் அல்லது கல்வி கற்கும் மாணவிகளுக்கு அறைகளும் வாடகைக்கு உண்டு. (53463) (7.6.3)
தொடர்பு:
இல. 831/34, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1781

## வீடு வாடகைக்குண்டு

நாவலர் வீதியில் நான்கு அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அசைவம் உண்ணாதவர்களும், அலுவலகங்களும் விரும்பத்தக்கது. (K.K.S.வீதியை அண்மித்துள்ளது)
(53398) (12.3.6) தொடர்பு: 077 740 8829

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
**Hotel Villa City**
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/16915) (10.6.3)

## கடை வாடகைக்கு

இணுவில், கே.கே.எஸ் வீதியில் 'நியூலங்கா பாம்' எதிரிலுள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:077 656 8972 (53499) (4.6.3)

## பலாலி வீதியில் வீடு வாடகைக்கு

கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 55(153) பலாலி வீதியில் வீடு வாடகைக்குண்டு. காரியாலயம், கல்வி நிலையம், களஞ்சியம், போன்றவைக்கும் உகந்தது. தொடர்பு: 0777 558 340 (சி/17164) (5.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# மணமக்கள்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ லண்டன் குடியுரிமையுடைய 1982இல் பிறந்த, அத்த நட்சத்திரம், லக்கின சூரியன் 7இல் செவ்வாய், 29 பாவம் உள்ள மணமக னுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
தொடர்பு : 077 266 3902 (53473) (7.6.3)

## மணமகள் தேவை

யாழ்.இந்து 1977 உத்தரம் முதலாம் பாதம், 5'X7" உயரம், வெள்ளை நிற அழகான B.Sc விஞ்ஞான பட்டதாரியும், U.K. ஆங்கில பட்டதாரி ஆசிரியருமான அரச உத்தியோகத்திலுள்ள மணமகனுக்கு 6 வயது வித்தியாசமுடைய அழகான படித்த அரச அல்லது தனியார் உத்தியோகம் பார்க்கும் மணமகளை எதிர்பார்க்கிறோம். (53435) (12.3.6)
தொடர்பு:
021 321 0480/071 994 4333

# வேலைவாய்ப்பு

## வேலையாள் தேவை

உணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
(53558)(12.3.6) தொடர்பு: 077 358 0646

## வேலைவாய்ப்பு

O/L சித்தியடையவில்லையா? சிங்கப்பூர், மலேசியா, மொரிஷியஸ் போன்ற நாடுகளில் படிப்புடன் கூடிய வேலை வாய்ப்பு.
தொடர்பு : 076 756 1346 (சி/17150) (7.6.3)

## ஆள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல பிறிண்டிங் நிறுவனத்திற்கு கணினி வடிவமைப்பு தெரிந்த ஆள்கள் தேவை. திறமைக்கேற்ப தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 603 1071 (53554) (7.6.3)

## பணியாள்கள் தேவை

செல்வா ரெலிகொமினிக்கேசன்
124, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.(பொஸ்கோ பாடசாலை அருகில்)
மேற்படி நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாள்கள் தேவை. வன்னிப் பகுதியைச் சேர்ந்த வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நன்றி. வணக்கம். மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.
தொடர்பு:077 719 3173 (53552) (4.6.3)

## தேவை

Care taker /Maintenance Cleaning Supervisor நேர்மையான, நல்ல உழைப்பாளி ஒருவருக்கு வேலை வாய்ப்பு உண்டு. 60 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தின் தலைநகரில் தங்கி இருப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: United Placements(Pvt) Ltd.
67A, Gregory's Road, Colombo -7
E-mail : realcommestate@gmail.com
SMS : 0727 981 202 (சி/17158)(5.6.3)

## வேலையாள்கள் தேவை

★ K.K.S. ரயில் நிலையத்தில் வேலை செய்யக்கூடிய கம்பி வேலை செய்வோர்/சட்டறிங் வேலை செய்வோர் உடனடியாகத் தேவை.
விபரங்களுக்கு : 071 454 0731

★ கொடிகாமம் வங்கிக் கட்டடத்துக்கு வேலை செய்யக்கூடிய செங்கல்லு/பூச்சு வேலை செய்யக் கூடிய மேசன்மார் தேவை.
071 328 6711
077 375 1803

★ திருநெல்வேலி பல்கலைக்கழக விடுதி நிர்மாண பணிகளுக்குத் தேவையான மாபிள் பதிக்கக் கூடிய மேசன்மார் தேவை.
077 375 1803
071 238 7106

★ கிளிநொச்சி பல்கலைக்கழக விடுதி நிர்மாணப் பணிகளுக்கான கம்பி/சட்டறிங் வேலை செய்யக் கூடிய ஆள்கள் தேவை.
விபரங்களுக்கு : 071 257 9327 (சி/17228)(7.6.3)

# ஏனையவை

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மையில், கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய பகுதிகளில் சிறிய குடும்பத்துக்கு நல்ல நிலையில் உள்ள வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 077 801 8799 (53403) (5.6.3)

## சேவை

China,Hongkong நாடுகளுக்கு வியாபார நோக்குடன் செல்பவர்களுக்கு visa, தங்க Hotel வசதி, மொழி பெயர்ப்பாளர்களுடன் வேண்டிய வசதிகள் செய்து தரப்படும்.
தொடர்பு: 0777 561 346 (சி/17151) (5.6.3)

## தையல்

இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.
இல. 39, நாவலர் வீதி. (யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகில்)
தொடர்பு: 0766 399 277 (53559)(5.6.3)

## இணையத்தள வடிவமைப்பு

பாடசாலைகள், கிராமங்கள், ஆலயங்கள் மற்றும் ஏனைய இணையத் தளங்களை குறைந்த செலவிலும் உயர்தரத்துடனும் இரண்டே நாள்களில் வடிவமைத்துக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.
தொடர்பு:077 339 4457 (53498) (4.6.3)

## ASIAN GLASS

அலுமினிய பிற்றிங் வேலைகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
தொடர்பு : 077 199 2736 (53552) (7.6.3)

## வாடகைக்கு வீடு தேவை

உத்தியோகம் பார்க்கும் கௌரவமான குடும்பத்திற்கு நெல்லியடி, மாலிசந்தி, வதிரிச் சந்தி அதனை அண்டிய பகுதிகளில் வாடகைக்கு வீடு தேவை. வீட்டு உரிமையாளர், தரகர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 350 6244 (51975)(5.6.3)

## தவறிவிட்டது

**கதிரிப்பிள்ளை அரவிந்தன்** என்பவருடைய தே.அ.அட்டை (801192670 V),சாரதி அனுமதிப் பத்திரம் என்பன முழங்காவிலுக்கும் பூநகரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (53561)(5.6.3)
தொடர்பு: 0755 287 682 / 077 517 2723

## நெடுந்தீவில் காணி தேவை

நெடுந்தீவில் பெரிய அளவான காணி தேவை.
தொடர்பு: 071 9022 353 (53563) (5.6.3)

## ASIAN INTERIOR

வீடுகள், அலுவலகங்கள் மற்றும் கட்டடங் களுக்கு சிறந்த முறையில் நிறப்பூச்சு (Painting) செய்து தரப்படும்.
தொடர்பு : 077 199 2736 (53551) (7.6.3)

## அமெரிக்க Green Card Visa - 2016

அமெரிக்க Green Card Visa விண்ணப்பிப்பதில் 12 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2016ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber Cafe, No. 8/3/4, Bristol Street, Colombo-01எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
**Tel: 011 2393919, 0774276579**

## வைத்தியம் ஞாயிறு-திங்கள்

நாட்பட்ட தலைவலி, கழுத்து, முள்ளந்தண்டு, இடுப்பு, முழங்கால், குதி, பாதம் வலி, வேதனை, குத்து, உளைவு, Arthritis, Rheumatoid நாட்பட்ட சளி, இருமல், இளைப்பு, Asthma, கடி, சொறி, Prostate வீக்கம், முடி கொட்டுதல், மாதவிலக்கு கோளாறுகள், குழந்தைப் பாக்கியத்துக்கான அனைத்து சிகிச்சைகள். (சி/17167) (7.6.3)
சித்த வைத்தியர் : Dr.R.Sivagurunathan
077 730 1669, நல்லூரில் சந்திக்கலாம்.

## காணி குத்தகைக்கு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற வர்த்தக நகரில் காணி குத்தகைக்கு உண்டு.
New Clock Tower Road, வாகனங்கள் விற்பனைக்குத் தகுந்த இடம்.
தொடர்பு: United Placements(Pvt) Ltd.
67A, Gregory's Road, Colombo -7
E-mail : realcommestate@gmail.com
SMS : 0727 981 202 (சி/17159)(5.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் அ.எம்)
★ ஒழுங்கற்ற பற்களை சீராக்குதல்
★ தாடை மிதப்புகளை சீராக்குதல்
★ அண்ணப்பிளவு உதடுகளுக்கான சிகிச்சை
★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

## ஒத்து மாறல்

கண்டியைச் சேர்ந்த நபர் யாழ். பல்கலைகழகத்தில் உள்ள சட்டத்துறைக்கு தெரிவாகி உள்ளார். அவர் பேராதனை பல்கலைக்கழக சட்டத்துறைக்கு தெரிவாகி உள்ள ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு: 077 063 8388

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபமுள்ளவர்களும், பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. மாநகர எல்லைக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

(53603) (45.6.3) தொடர்பு: 077 949 8308

## தேவை

730, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வீட்டுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் தேவை.

(53565) (45.6.3) தொடர்பு: 021 222 9239

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) அமைதியான சூழலில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 072 959 6597

# கடதாசி விற்பனை நிலையத்தில் தீ

மாலம்பே, தலாஹேன பகுதி யில் கடதாசி விற்பனை நிலைய கட்டடமொன்றில் நேற்று முன் தினம் காலை தீ விபத்து ஏற் பட்டுள்ளது. இதுதொடர்பாக காலை 7 மணியளவில் கிடைத்த தகவலின் பிரகாரம் மூன்று தீயணைப்பு வாகனங்களைசம்பவ இடத்திற்கு அனுப்பிய தாக கோட்டை தீயணைப்பு சேவைப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர்.

தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக, கொழும்பு மற்றும் தெஹிவளை கல்கிஸ்ஸதீயணைப்பு சேவைப் பிரிவினரின் உதவியும் பெறப்பட்டது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். தீ விபத்துக்கான காரணம் இது வரை தெரியவரவில்லை. (ற)

## கடை வாடகைக்குத் தேவை

குளிர்பான நிலையம் நடத்துவதற்கு யாழ்.நகரில் மக்கள் நடமாட்டம் உள்ள இடத்தில் கடை வாடகைக்கு தேவை.

(47321) (12.3.6) தொடர்பு: 077 078 0240

## மரண அறிவித்தல்



திருமதி
**பவளராணி யோகநாதன் (அஞ்சி)**

காரைநகர், சயம்பு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பவளராணி யோகநாதன் (அஞ்சி) நேற்று (25.10.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாதனின் (ஓய்வுபெற்ற வைத்தியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா (மலாயன் பென்சனியர்)-இலச்சுமி தம்பதியரின் அன்பு மகளும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ரெத்தினாவதி (மலேசியா) மற்றும் கனகேந்திரம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நடராசா, தியாகராசா மற்றும் உமாதேவி, காலஞ்சென்ற பத்மநாதன், சண்முகநாதன் மற்றும் குணநாதன் (கனடா), டில்லிராணி (கொக்குவில்) ஆகியோரின் மைத்துனியும், கமலாதேவி (கனடா), நகுலாதேவி (கனடா), நிர்மலா (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் (கொக்குவில்) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சயம்பு வீதி, காரைநகர். (53614) (10) ந.விஜயகுமார் (ஆசிரியர்)

## மரண அறிவித்தல்



**கார்த்திகேசு கனகசபை**
(ஓய்வுபெற்ற அதிபர்)

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்கு வில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கனகசபை (ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று (25.10.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை (பொன்னம்மா - ஓய்வுபெற்ற அதிபர்)யின் அன்புக் கணவரும், தர்மசீலன் (மதுவரி அத்தியட்சகர், யாழ்ப்பாணம்), ஞானசீலன் (லண்டன்), ரூபிகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலஷ்மி, சாருலதா (லண்டன்), யயோதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், தேனுகா, ஜெஸ்நிலா, பிருந்தன், பிருந்தா ஆகியோரின் அன்புப் பேரனும், கமலாம்பிகை (பிரான்ஸ்), இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மற்றும் குகபாலன் (பேராசிரியர்) யோகநாதன் (பிரான்ஸ்), திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மீனாட்சி, செல்லம்மா (கனடா), சிவக்கொழுந்து (கனடா), காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற கணக்காளர்), இராசேந்திரம் (கனடா), நற்குணராசா (பிரான்ஸ்), தேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகாக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொ.பே. 077 531 2784
(53609) (45.3.6)
தகவல்: க.தர்மசீலன்
(மகன் - மதுவரி அத்தியட்சகர் யாழ்ப்பாணம்)

# மரம் விழுந்து பெண்கள் சாவு

மாத்தளை, இறத்தோட்டையில் நேற்று முன்தினம் மரமொன்று விழுந்ததில் மூன்று பெண்கள் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று இறத்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர் பிலான மேலதிக தகவல்கள் வெளியாகவில்லை. (ற)

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்

பிறப்பு 07.01.1932 இறப்பு 26.10.1999

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இன்று(26.10.2014) ஞாயிற்றுக்கிழமை சிறிபாஸ்கரன் ஞாபகார்த்த மண்டபத்தில் (R.D.S.மண்டபம்) பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

பாலாம்பிகை சிறிபாஸ்கரன் (மனைவி)

## மரண அறிவித்தல்

**வீரசிங்கம் குழந்தைவேலு**
(ஆயுள்வேத வைத்தியர்)



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் குழந்தைவேலு நேற்று (25.10.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம்-தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி (இளைப்பாறிய காணி உத்தியோகத்தர்), கமலாம்பிகை (இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்), பத்மநாதன் (இளைப்பாறிய விவசாய உத்தியோகத்தர் - சீனிக் கூட்டுத்தாபனம்), பத்மாவதி (நிர்வாக உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், சாவகச்சேரி), கமலநாதன் (ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரதேவா (பொறியியலாளர்), மாலினி (மருத்துவ. ஆவண உதவியாளர்), குமாரி பாக்கியவல்லி ஆகியோரின் மாமனாரும், ரவீந்திர குமார், கஜனி, பத்மகுமார், சாகித்தியன், குருசோத்மன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற தாமோதரம் பிள்ளை, நவரட்ணம், அழகரட்ணம், மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டையடி தூவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
077 361 8673
(53606) (7.6.3)
தகவல்: குடும்பத்தினர்.
வி.சந்திரதேவா

## மரண அறிவித்தல்



**கந்தையா பொன்னம்பலம்**

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம் 24.10.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தையல்முத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், மகாலஷ்சுமி அவர்களின் அன்புக்கணவரும், சுதேசபாலன் (பிரான்ஸ்), சத்தியபாலன் (கனடா), விஜயலஷ்சுமி, தேவமலர் (கனடா), பாலகுமாரன் (பிரான்ஸ்), சுகந்தினி(கனடா), அருள்தேவி(கனடா), யோகேஸ் வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகா (பிரான்ஸ்), மஞ்சுளா(கனடா), சோதிராஜா, பிறேம் (கனடா), சிவதர்ஷினி(பிரான்ஸ்), மோகனச்சந்திரன்(கனடா), இரவீந்திரன்(கனடா), விஜியந்தி(கனடா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பவளம், தங்கச்சியம்மா, குமாரசாமி மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராணிமலர், தவராஜா, கனகாம்பிகை(கனடா), மகேந்திரராஜா (டென்மார்க்), மல்லிகாதேவி(கனடா), மன்மதராஜா(கனடா) ஆகியோரின் அன்பு மச்சானும், மைதிலி, மிதிலன், கிருஷாந் (பிரான்ஸ்), சுருதி, கோகுல் (கனடா), அருந்ததி, மாலதி, சகிலா, திபாஷினி, பபிசா, கபிசா, லெனிசா(பிரான்ஸ்), சங்கீதன், லக்ஷனா(கனடா), ரஜனுஜன், வர்ணஜா(கனடா), ஆர்யன், ஆதன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
(53608)(4.3.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**திருமதி நாகரத்தினம் செல்வநாயகம் (பொன்னம்மா)**

உரும்பிராய் தெற்கு, வேம்பன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம்செல்வநாயகம் (பொன்னம்மா) 25/10/2014 சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற செல்வநாயகத்தின் மனைவியும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் ரஞ்சினி, ராகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கந்தசாமி, பிரேமராஜன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், நவமணி, மலர்மணி, இராசநாயகம், குணநாயகம் அரியநாயகம் மற்றும் கனகநாயகம் ஆகியோரின் மைத்துனியும், சபேசன் - சுகந்தினி, சுரேன், துஷ்யந்தி - விதுரன், சுஜமுகன் ஆகியோரின் பசமிகு பேர்த்தியும், மதுர்ஜனா, சாரண்ஜன், கவிசஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26/10/2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவாது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு.
077 748 8301, 021 223 0868
(சி/17243)
தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் மனோன்மணி நன்னித்தம்பி

மனம் மகிழ 14.05.1947 மனம் நெகிழ 26.10.2013

அன்பு அம்மாவே!
அன்புமொழி பேசி எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே
நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது
ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம்முடனே இருக்கின்றது
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா என்று அழைக்க
நீங்கள் இப்பூவுலகில் இல்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.
இராவத்தை,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். தாயாரின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் முக்கியஸ்தர்கள் வாடிக்கையாளர்களாவார்கள்.

**இடபம்**: உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள்.

**மிதுனம்**: குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் வாய்ப்புகள் வரும்.

**கடகம்**: முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள்.

**சிங்கம்**: தைரியமாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்களின் ஆதரவுக் கிடைக்கும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு அதிகரிக்கும்.

**கன்னி**: நீண்ட நாள்களாக தள்ளிப் போன காரியங்கள் நிறைவேறும். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**நாளை**

ஐப்பசி-10 திங்கட்கிழமை 27.10.2014
திதி: சதுர்த்தி பி.இ.02.07 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ.05.41 வரை
சுபநேரம்: 12.03 - 01.33 வரை
இராகுகாலம்: 07.33-09.03 வரை
சதுர்த்தி விரதம்

**துலாம்**: புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். விமர்சனங்களுக்கு அஞ்சாதீர்கள். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி எந்தப் பொறுப்புகளையும் ஒப்படைக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் அளவாகப் பழகுங்கள்.

**விருச்சிகம்**: மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதத்தைத் தவிருங்கள்.

**தனுசு**: சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். மற்ற வர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மகரம்**: பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கும்பம்**: கடந்த இரண்டு தினங்களாக குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் விலகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்**: அலைச்சலும், சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உதவி கேட்டுத் தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 7 | 2 | 3 | | | | |
| | 2 | 9 | | | 4 | | 5 | 1 |
| | 4 | | | | 6 | 3 | 7 | |
| | | | 8 | | 5 | | | 9 |
| | 9 | | 6 | | 7 | | 2 | |
| 8 | | | 9 | | 3 | | | |
| | 1 | 5 | 4 | | | | 3 | |
| 4 | 3 | | 1 | | | 7 | 8 | |
| | | | | 5 | 2 | | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 6 | 2 | 5 | 1 | 9 | 8 | 3 |
| 9 | 3 | 2 | 4 | 8 | 7 | 1 | 6 | 5 |
| 8 | 1 | 5 | 6 | 3 | 9 | 2 | 7 | 4 |
| 1 | 9 | 7 | 3 | 6 | 8 | 4 | 5 | 2 |
| 2 | 8 | 4 | 1 | 9 | 5 | 6 | 3 | 7 |
| 6 | 5 | 3 | 7 | 4 | 2 | 8 | 1 | 9 |
| 5 | 7 | 1 | 9 | 2 | 6 | 3 | 4 | 8 |
| 4 | 2 | 8 | 5 | 1 | 3 | 7 | 9 | 6 |
| 3 | 6 | 9 | 8 | 7 | 4 | 5 | 2 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Richard

உலக தரம் வாய்ந்த காகிதாதி பொருள்களை வழங்கும்

**எங்களுடன் இணையுங்கள்**

தரம், தொழில் உரிமை, புதியவற்றை வழங்கல் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றிற்கு 50இற்கு மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்ற Richard Trading Co (Pvt) Ltd ஆனது காகிதாதிகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் குறிப்பேடுகளை உற்பத்தி செய்து விநியோகித்து வரும் பாரிய கம்பனிகளில் ஒன்றாகும். எமது கம்பனிக்கு விநியோகஸ்தர், விற்பனைப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர்.

**விநியோகஸ்தர் (Distributors)**

(யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு)

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

- 1.5 மில்லியன் (15 இலட்சம்) ரூபாவிற்குக் குறையாத வங்கி உத்தரவாதம்
- 10 அடி நீளம் கொண்ட லொறி.

**விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

- ஆகக் குறைந்தது இரண்டு வருட அனுபவம்
- க.பொ.த.சா.தரப் பரீட்சை / உயர்தரப் பரீட்சையில் சித்தி.

தெரிவு செய்யப்படும் விற்பனைப்பிரதிநிதி விண்ணப்பதாரிகள் 50,000/-இற்கு குறையாத கவர்ச்சிகரமான சம்பளத்தினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்களை கீழ்வரும் முகவரிக்கு ஈமெயிலிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

**"Application For Distributor/Sales Rep"**
**Richard Trading Co (Pvt) Ltd,**
**No.64, Perakumba St,Kurunegala.**

(சி-53443) (12.6)

ஈமெயில்: careers@richard.lk மேலதிக தொடர்புகளுக்கு: 077 354 0024

Richard AVS Shine® VENI BALL PENS STANDARD

**கனடாவில் கல்வி** கல்வி வேலை வதிவிடம்

CANADIAN COLLEGE
FOR HIGHER STUDIES

www.thecanadiancollege.ca
705 Progress Ave - Unit 108, Toronto, ON M1H 2X1
T: (416) 850-1456 E: learn@thecanadiancollege.ca

**Study in Canada**
**Spot Admission**



எமது பாடநெறிகள்
System Administration (UNIX)
Network (LAN/WAN) Administration
Post Graduate Diploma in Enterprise IT Management

**Apply Now with O/L & A/L for Jan- Apr-June-Sep 2015 Intake**

**இலவச கருத்தரங்கு மற்றும் உடனடி அனுமதி**
**நவம்பர் மாதம் 1ம் மற்றும் 2ம் திகதிகளில்**
**காலை 10.00 மணியிலிருந்து பகல் 1 மணி வரை**
**வெள்ளவத்தை FLEX INSTITUTE இல் நடைபெறும்.**

தயவு செய்து உங்கள் கல்வி ஆவணங்களைக் கொண்டு வரவும்.
விசாரணைகள் மற்றும் பதிவுகளுக்கு அழையுங்கள் - 0777 761 346

(சி-17153)

You can meet president of Canadian College for Higher Studies and UWIN Pro


flex Institute Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Tel: 2501 766 E-mail: flexinstitute@sltnet.lk
Web:www.flexinstitute.lk

FLEX Graphic

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 190

## நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு, நோய் ஏற்பட்டாலும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு தினமும் குறிப்பிட்ட தூரம் நடப்பது அல்லது நடைப்பயிற்சி அவசியம் என்பது உண்மையா?



'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முன்னோர் வாக்கு. ஒருவர் இவ்வுலக வாழ்வை அனுபவிப்பதற்கு நோயற்ற உடல் அவசியம். நடைப் பயிற்சி மேற்கொள்பவர்களை நோய்கள் எளிதில் தாக்குவதில்லை. தினமும் குறிப்பிட்ட தூரம் நடப்பது நல்லதொரு தேகப் பயிற்சி. பத்திரமானது; செலவே இல்லாதது. எமது அன்றாட அலுவல்களுடன் எளிதாக இதனையும் மேற் கொள்ளலாம். இது, எமது வாழ்நாள் முழுவதும் செய்யக் கூடிய இன்பமான பயிற்சியாகும். எனினும் ஒரே தடவையில் நீண்ட தூரத்தை இலக்காக வைத்து நடக்க வேண்டாம். ஆரம்பத்தில் 5-10 நிமிடங்களுக்கு நடக்கவும், பின்பு மெதுவாக நேரத்தைக் கூட்டவும். மெதுவாக நடக்கும் நேரத்தை கொஞ்சம் கொஞ்சமாக கூட்டிக் கொண்டு போனால், இயற்கையாகவே செல்லும் தூரம் அதிகமாகும். ஆரம்பத்தில் ஒருவர் 30 நிமிடங்களில் ஒரு மைல் நடப்பார் என்றால் ஓர் அனுபவஸ்தர் அதையே 10-12 நிமிடங்களில் நடந்து முடித்துவிடுவார். உங்களால் முழிந்த வரையில் உடல் சௌக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கக் கூடிய வேகத்தில் நடக்கவும். இந்தப் பயிற்சியில் ஈடுபாடு உடைய நண்பர் ஒருவர் உங்களுக்கு கிடைப்பாரானால் அது உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்கு அலுப்பு, சோர்வு ஏற்படும்போது அவருடைய ஈடுபாடு உதவியாக இருக்கும்.

நீரிழிவு நோயாளிகள் தினமும் 40 நிமிடங்களுக்கு வேகமான நடைப் பயிற்சி செய்வது நல்லது. நடக்கும் போது கைகளை வீசி நடவுங்கள். இறுக்கமான ஆடை அணிவதை தவிருங்கள். உடல் வியர்வையை வெளியேற்றும் தளர்வான ஆடைகளை அணியுங்கள். தரமான, எடை குறைவான செருப்பு, சப்பாத்துகளை உங்கள் வயது விருப்பத்துக்கு ஏற்ற காலணிகளை அணியுங்கள். அத்துடன் நடக்கும் போது முழங்காலில் இருந்து அடி எடுத்து வைக்காமல், உங்கள் இடுப்பில் இருந்தே அடி எடுத்து வையுங்கள். நடக்கும்போது உங்கள் தலையை நிமிர்த்தி வைத்துக் கொண்டு நடவுங்கள்.

இரண்டாம் வகை நீரிழிவு நோயாளிக்கு (Type II Diabetic) இன்சுலின் சரியான அளவில் சுரந்தாலும், அது முழுமையான அளவில் வேலை செய்யாது.இவர்களின் உடலில் இன்சுலின் இயங்காமல் இருப்பதற்கு இன்சுலின் எதிர்ப்பு நிலை இருப்பதே காரணம். அதாவது நமது உடலில் உள்ள கலங்களில் காணப்படும் இன்சுலின் வாங்கிகள் Insulin Receptors என்ற பூட்டுக்கள் திறக்கப்பட வேண்டும். இதற்கு இன்சுலின் என்ற சாவி தேவை. நடைப் பயிற்சியின்போது மேற்படி இன்சுலின் வாங்கிகள் எல்லாம் தூண்டப்படுவதால் கலங்களில் காணப்படும் குளுக்கோஸ் நுழைவாசல்கள் திறக்கப்படுகின்றன. இதனால் குருதியில் உள்ள வெல்லமானது கலங்களுக்குள் நுழைகின்றது. அத்துடன் சக்தியாக மாறுகின்றது. இது தசை திசுக்களின் செயற்பாட்டுக்கு உதவுகின்றது. இதன் மூலம் குருதியின் வெல்ல மட்டம் குறைகின்றது. எனவே நடைப் பயிற்சி நீரிழிவு நோயாளிக்கு நல்ல மருந்து.

அத்துடன் பெரும்பாலான நீரிழிவு நோயாளிக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கும். கொலஸ்ரோல் அதிகமாக இருக்கும். இரத்த நாளங்களின் மீளும் திறனை நடைப் பயிற்சியானது அதிகப்படுத்துவதால் உயர் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படுகிறது. இது தவிர எமது இருதயத்துக்கு தீமை செய்யும் LDL (எல்.டி.எல்) கொலஸ்ரோல் மற்றும் டிரைகிளிரைரட்ஸ் அளவுகளையும் குறைக்கின்றது. அத்துடன் உடலுக்கு நன்மை செய்யும் HDL (எச்.டி.எல்) கொலஸ்ரோலையும் அதிகப்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக மாரடைப்பு வரும் வாய்ப்புக்கள் நடைப் பயிற்சி செய்வோருக்கு குறைவடைகின்றது. மேலும் சாதாரண வேளைகளில் தசைகளுக்குள் சோம்பிக் கிடக்கும் மெல்லிய இரத்த நாளங்கள் கூட, நடைப் பயிற்சியின் போது விரிவடைகின்றன. இதனால் பல புதிய நாளங்கள் தோன்றுகின்றன.

இதனால் தசைகளில் இரத்த ஓட்டம் அதிகரிக்கப்படுகின்றது. இதன்போது இரத்தத்தில் மிகுந்து இருக்கும் வெல்லத்தை பயன்படுத்த இப்பொழுது அதிக இடம் கிடைக்கின்றது. இதன்மூலம் குருதியில் வெல்ல அளவு குறைவதற்கு வாய்ப்பு உள்ளது.

உடல் எடை அதிகரிப்பானது, எண்ணற்ற நோய்களின் பிறப்பிடமாகும். நடைப் பயிற்சியின் போது பெரும்பாலான தசைகள் ஒரே நேரத்தில் தொடர்ந்து வேலை செய்வதால், அதிகளவில் சக்தி வெளியேறுகின்றது. இதற்கு கொழுப்பு பயன்படுத்தப்படுகின்றது. இதன் பலனாக உடலில் உள்ள அதீதக் கொழுப்பு மற்றும் உடலில் தேவையற்ற இடங்களில் உள்ள கொழுப்பு குறைவதால் உடல் எடை குறைகின்றது. உடல் எடையைக் குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஓர் இலகுவான வழி நடைப் பயிற்சியாகும். அத்துடன் எடை அதிகரிப்பால் உருவாகும் நீரிழிவை நடைப் பயிற்சியால் தவிர்க்க இயலும்.

நடக்கும்போது எவ்வாறு சுவாசிக்கின்றோம் என்பதை உணருங்கள். முதலாவது ஆழ்ந்த மூச்சை வெளியே விடுங்கள். பின்னர் உங்களைச் சுற்றி இருக்கும் வளியை ஆகாயத்தை முகர்வது போன்று முயற்சி செய்யுங்கள். அதிகாலை வேளையில் திறந்த வெளிகளில், மலைகள் மீதான பாதைகளில் வேகமான நடக்கும்போது அமைதியான சுற்றுச்சூழலுடன் தூய்மையான வளிமண்டலக் காற்றை நுகர முடியும். இதன்மூலம் உங்கள் உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி அடைகின்றன. அத்துடன் எமது மூளையில் எண்டார்பின் Endorphin எனப்படும் ஹோர்மோன் தூண்டப்படுவதால் மன அழுத்தம் குறைகின்றது. மன அமைதிக்கு வழி செய்வதால் நாள் முழுவதும் உற்சாகமாக உழைப்பது மட்டுமல்லாமல் மன அழுத்தத்தால் உருவாகும் நீரிழிவு நோயைத் தவிர்க்கலாம். எனவே ஒருவர் நடக்காவிட்டால் அவர் நீரிழிவை நோக்கி நடக்கிறார் என்பதை உணருங்கள்.

S சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



## கர்ப்பகாலக் கவனிப்பு

ஒரு பெண் கர்ப்பமடையும்போது உடல், உள ரீதியாக பூரணசுகத்துடன் இருக்கவேண்டும். திருமணமான பின்பு குழந்தையை எதிர்பார்த்து இருக்கும் போதே போலிக்கமிலம் உள்ளெடுக்க வேண்டும். பூரண நிறையுணவு உள்ளெடுக்க வேண்டும். ரூபெல்லா ஊசி போட்டுக் கொள்ளாத பெண்கள் மருத்துவ ஆலோசனையைப் பெற்று ரூபெல்லா ஊசி போட்டுக் கொண்ட பின்னரே கர்ப்பமடைதல் சிறப்பாகும்.

கர்ப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தமது பிரதேச குடும்பநல கிளினிக்கில் பதிவு செய்து கொள்ளவேண்டும். அடுத்ததாக வைத்தியசாலையில் முதற்கிளினிக் பதிவு செய்யப்படும். கர்ப்பகால 12 கிழமைகளில் இது அவசியம். பின்னர் சலப்பரிசோதனை, இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும். அதாவது, சலத்தில் குருதிக்கோஸின் அளவு, புரதம் வெளியேறும் அளவு, இரத்தவகை, ஈமோகுளோபின் அளவு, VDRL பரிசோதனை என்பவைகளையும் அவர்களது நோய் நிலைக்கு ஏற்ப மேலதிக பரிசோதனைகளையும் செய்து கொள்ள வேண்டும்.

முதல் 28 கர்ப்பகால கிழமைகளில் ஒவ்வொரு 4 கிழமைக்கு ஒரு தடவையும் 36 தொடக்கம் 38 கிழமைகளுக்கு ஒவ்வொரு 2 கிழமைக்கு ஒரு தடவையும், அதன் பிறகு ஒவ்வொரு கிழமையும் கிளினிக் செல்லுதல் வேண்டும்.

12 கிழமைகளுக்குள் முதலாவது ஸ்கான் செய்யப்படல் வேண்டும். இதன்போது கர்ப்பகாலம் உறுதிசெய்யப்படும். குழந்தையின் அங்கக் குறைபாட்டைப் பரிசோதித்துப் பார்க்கும் ஸ்கான் 18 -20 கிழமைகளுக்கு இடையில் செய்யப்படல் வேண்டும்.

கர்ப்பிணித் தாய் கர்ப்பமாவதற்கு முன்பிருந்தே போலிக்கமிலம் எடுக்க வேண்டும். பின்னர் முதல் மூன்று மாதங்களுக்கு கட்டாயம் அதனைப் பாவிக்க வேண்டும். கல்சியம், இரும்புச்சத்து குளிசை என்பன முதல் மூன்று மாதங்களின் பின்னர் பாவிக்கத் தொடங்க வேண்டும். கல்சியம் குளிசை காலையிலும். இரும்புச்சத்துக் குளிசை இரவிலும் எடுக்க வேண்டும். திரிபோஷா, சோயாபோஷா மா என்பன உட்கொள்ள வேண்டும். தகுந்த முறையில் பூச்சி மருந்து எடுக்க வேண்டும். தகுந்த காலப்பகுதியில் ஏற்புத்தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

கர்ப்பகாலத்தின்போது வேறு ஏதாவது மருந்துகள் பாவிக்க வேண்டி ஏற்படின் நீங்கள் கர்ப்பவதி என்பதனை வைத்தியரிடம் தெரியப்படுத்தி ஆலோசனை பெற்ற பின்னரே பாவிக்க வேண்டும். கர்ப்பகாலம் முழுவதும் நன்கு சுத்தமாக, முக்கியமாக பற்சுத்தம் பேணப்படல் வேண்டும். பாலூட்டும் முறையைச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சரியான முறையில் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பற்றி தெரிந்து கொள்ளல் வேண்டும்.

மருத்துவர் கஜேந்தினி வேலுப்பிள்ளை,
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா வைத்தியசாலை.

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேர்தல் வெற்றியைத் தவிர வேறில்லை நிதி அறிக்கையில்

சலுகைகளை வாரி இறைத்தபடி வந்து விழுந்திருக்கிறது இலங்கையின் 2015ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை. அரச அலுவலர்கள், விவசாயிகள், பண்ணையாளர்கள், மூத்த குடிமக்கள், மீனவர்கள், விசேட தேவையுடையோர், நலிவடைந்தோர், வைத்தியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், நீதிபதிகள் மற்றும் நோயாளிகள் என்று அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கி சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்து 10 ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட அதிக சலுகைகள் கொண்ட நிதி அறிக்கை என்று இதனைத் துணிந்து கூறலாம். மக்களுக்குச் சலுகைகளை அள்ளி வழங்கியது என்ற ரீதியில் இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டலாம் என்றபோதிலும் இதனால் நாட்டுக்கு முன்னேற்றம் உண்டா என்ற கேள்விக்குப் பதில் சாதகமாக இல்லை.

கடந்த நிதி அறிக்கையில் காணப்பட்டதைவிட இந்த முறை துண்டுவிழும் தொகை மேலும் அதிகரித்திருக்கிறது. வருமானம் 1,689 பில்லியன் ரூபாய். செலவு 2,210 பில்லியன் ரூபாய். துண்டுவிழும் தொகை 521 பில்லியன் ரூபாய். இப்போது அறிவிக்கப்பட்டுள்ள மானியங்கள் மற்றும் சலுகைகளால் செலவு மேலும் அதிகரித்திருக்கிறது. அதன் பொருள் ஒவ்வொரு தனிமனிதனதும் கடன் தொகை மேன்மேலும் அதிகரிக்கிறது என்பதுதான்.

அதேவேளையில் இந்த நிதி அறிக்கையிலும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கே அதிக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. நகர அபிவிருத்தியும் இந்த அமைச்சுக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதால் மொத்தத் தொகையும் பாதுகாப்புக்குச் செலவிடப்படுகிறது என்று சொல்ல முடியாத நிலைமை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எப்படி இருந்தபோதிலும் மக்களின் அடிப்படை நலன் சார்ந்த சுகாதாரம் மற்றும் கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை அதிகமானது. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கு 285 பில்லியன் ரூபாவும், சுகாதாரத்துக்கு 139 பில்லியன் ரூபாவும், கல்வி மற்றும் உயர் கல்விக்கு 88 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஓர் அரசுக்கு நாட்டின் பாதுகாப்பும் நகர அபிவிருத்தியும் முக்கியமானதுதான் என்றபோதிலும், சுகாதாரமும் கல்வியும்கூட தனிமனித விருத்திக்கும், பாதுகாப்புக்கும் அவசியமானவை என்பதை மறந்துவிடலாகாது. எனவே, அதற்கே அதிகளவு நிதி ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் வழக்கம்போல பாதுகாப்புக்கே அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட 17 விழுக்காடு - ஐந்தில் ஒரு பகுதி - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திக்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த வருடம் துண்டுவிழும் தொகையை வெகுவாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டது என்ற கோஷத்துடன் நிதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்தத் தடவை அது தலைகீழாகிவிட்டது. காரணம் தேர்தல். அடுத்த ஜனவரி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடக்கக்கூடும் என்ற நிலையில், அதனைக் குறிவைத்தே இந்த நிதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவானது. அதைத்தவிர, நாட்டின் வளர்ச்சி, மக்கள் நலன் என்பவற்றில் அக்கறை கொண்ட நிதி அறிக்கையாக இது இல்லை. மக்களைத் தற்காலிக மகிழ்ச்சியில் ஆழ்த்தி, அவர்கள் அந்த மயக்கத்தில் இருக்கும்போதே தேர்தல் வெற்றி ஒன்றைப் பறிப்பதை நோக்கமாகக் கொண்டது. கொழும்பு அரசு மக்களை எப்படிப்பட்டவர்களாக நோக்குகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

# சாவை நாடும் பட்டினித் துயர்

## அவலத்தைத் தேடியறிந்து ஆவன செய்ய வேண்டும்



கந்தவனம் கோணேஸ்வரன்.

தமிழர் தாயகம் என்பது வெறுமனே நிலப்பரப்பு மாத்திரமல்ல. அதனுடன் இணைந்த மனிதர்கள், விலங்குகள், பறவைகள், மரங்கள் உட்பட அனைத்து வளங்களும்தாம். இவற்றுள் எதற்கு ஊறுநேர்ந்தாலும் அது தாயகத்துக்கான இடையூறாகவே கொள்ளப்படும்.

தமிழர் தாயகம் பகுதிகளில் அண்மைக்காலமாக பட்டினிச்சாவுகளும், பட்டினி தாங்கமுடியாமல் சாவதற்கான முயற்சிகளும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன. 'தனியொருவருக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினையே அழித்திடுவோம்' என்றான் பாரதி. 'இரந்து ஒருவர் உயிர்வாழவேண்டி நேருமாயின். இந்த உலகே அழிந்துபோகட்டும்' என்றார் வள்ளுவப் பெருந்தகை.

இவையெல்லாம் இலங்கைத் தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் வெற்றுரைகளாகப் போய்விடுமா என்ற சந்தேகம் தோன்ற ஆரம்பித்துள்ளது. உழைக்க மறுக்கும் ஒருவன் சோம்பேறியாகித் தன் உயிரை விட்டால் அது அவன் பாடு. ஆனால். உழைத்தும் அது போதாது வறுமையால் உயிரை இழப்பதும், உழைத்து ஓய்ந்தபின் வறுமை தாங்காமல் உயிரை இழக்க முயல்வதும் சகித்துக்கொள்ளத் தக்கவையல்ல. சில மாதங்களுக்கு முன்னர் வடபகுதியில் கரவெட்டியைச் சேர்ந்த பாடசாலை மாணவன் ஒருவன் தனது உயிரைப் போக்கிக்கொள்வதற்கு வறுமையே காரணமாக இருந்திருக்கிறது. கடந்த மாதம் வவுனியா ஈஸ்வரிபுரத்தில் ஒரு வயோதிபத் தாய் பசியின் கொடுமை தாங்கமாட்டாமல் சுருண்டு விழுந்து இறந்திருக்கிறார். அந்த மூதாட்டி கிடைத்த உணவைத் தனது பேரக்குழந்தைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு நான்கு நாள்கள் உணவின்றியே தன் காலத்தை யோட்டியதால் வந்த வினை அது.

அந்த மூதாட்டியின் மகளின் கணவர் நோய் காரணமாக வவுனியா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சைபெற்று வந்திருக்கிறார். குடும்பத்தில் உழைக்கும் உறுப்பினர் நோயில் படுத்திருந்ததால் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. ஏழைக்குடும்பம் என்பதால் கடன் கொடுத்துதவ எவரும் முன்வரவில்லை. இந்நிலையில். அந்த மூதாட்டி பேரக் குழந்தைகளுக்கு உணவளிப்பதற்காகத் தன்னைப் பட்டினி போட்டுள்ளாள். அது அவர் உயிரைக் கவர்ந்துள்ளது.

இவற்றை வெறும் சம்பவங்களாக எடுத்துக்கொள்ள முடியாது. இவை எமது இனத்தின் பலவீனங்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய பலவீனங்களை நமக்குள் வைத்துக்கொண்டு விடுதலைக்காகப் போராடுகிறோம்; புதுவழி காண்கிறோம் என்று பேசுவதில் என்ன நியாயம் இருக்கப்போகிறது.

இத்தகைய நிலைக்கு இலங்கை அரசை மட்டும் காரணமாகக் காட்டி நாம் தப்பித்துக்கொள்ள முயலக்கூடாது. இலங்கை அரசு தமிழர்கள் விடயத்தில் சரியாக நடந்துகொள்வதில்லை என்ற காரணத்தால்தான் தமிழ்மக்கள் தம்மைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலட்சியம் செய்துவிட முடியாது.

கரவெட்டி மாணவன் தன்னை மாய்த்துக்கொண்டது தொடக்கம் சம்பூர் அகதிமுகாமில் வயோதிபரொருவர் வறுமை காரணமாகத் தனது கழுத்தைத் தானே அறுத்துக்கொண்ட சம்பவங்கள்வரை அனைத்தும் கிராமப்புறங்களில்தான் நடந்திருக்கின்றன. எனவே, இத்தகைய சம்பவங்கள் நடைபெறக்கூடும் என்பது முன்கூட்டியே கணிக்கமுடியாத ஒன்றாக இருந்திருப்பதற்கும் வாய்ப்பில்லை.

கரவெட்டி, செல்வா நகர், ஈஸ்வரிபுரம் ஆகிய இடங்களில் இத்துயரச் சம்பவங்கள் வீடுகளில்தான் இடம்பெற்றிருக்கின்றன. கிராமப்புறத்து மக்கள் நகர்ப்பகுதி மக்களைப் போன்றவர்களல்லர். ஒருவரோடு ஒருவர் அன்பு பூண்டு நெருங்கிப் பழகும் இயல்புடையவர்கள்.

அப்படியிருந்தும் இறந்தவர்களது வறுமையை அயலார் புரிந்துகொள்ள முடியாமற்போனது ஆச்சரியமானதுதான். அவர்களையும் மீறியே இந்தத் துக்ககரமான சாவுகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதுதான் வேதனையைத் தருகின்றது.

தமிழர் பகுதிகளில் போரின் பாதிப்புக் காரணமாகப் பொருளாதார நிலையில் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ள பல தமிழ்க் குடும்பங்களுக்குத் தமிழ் அரசியல்வாதிகள் முதல் சமூக அமைப்புக்களும். சமூகப் பரோபகாரிகளும் பற்பல வழிகளில் உதவி வருவதென்னவோ உண்மைதான்.

இத்தகைய உதவிகள் வரவேற்கப்படவேண்டியவை. ஆனால், இவை வறுமையில் வாடும் மக்களுக்குப் போதுமானதாக இல்லை. இத்தகைய உதவிகள் அதிகரிக்கப்படல் வேண்டும். உள்நாட்டில் வாழ்கின்றவர்களும் தங்களாலான உதவிகளைத் தங்கள் உடன்பிறப்புகளுக்குச் செய்யவல்ல மனத்தினராக மாற வேண்டும். ஆகக் குறைந்தது தங்கள் பக்கத்து வீட்டுக்காரர்களாவது பசியோடு வாழவில்லை என்பதை உறுதிப்படுத்துக்கொள்ள வேண்டும்.

சம்பூர் மக்கள் தொடந்தும் பல ஆண்டுகளாக அவலத்திலேயே வாழ்ந்து வருகிறார்கள். திருகோணமலை மாவட்டத்தின் பரிதாபத்துக்குரிய மக்களாக அவர்கள் இருக்கிறார்கள். 2006 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற மாவிலாறு தாக்குதலின்போது 1.250 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு உயிரைக் கையில் பிடித்தபடி ஓடத்தொடங்கினார்கள். அவர்களின் துன்பதுயரங்கள் இன்றுவரை குறையவில்லை.

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு அரசு வழங்கிவந்த உலருணவு நிவாரணமும் 2012 இறுதிப்பகுதியுடன் நின்றுபோய்விட்டது. ஊருக்கே சோறிட்ட மக்கள் ஒருவேளைச் சோற்றுக்கே கஷ்டப்படத் தொடங்கினார்கள். பட்டினித்துயரால் கழுத்தை அறுத்துக்கொண்டு இறந்துபோய் விடலாமா என்று முதியவர்கூடச் சிந்திக்கத் தலைப்பட்டார்.

மக்கள் பிரதிநிதிகள் என்போர் மாதாந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்டு வாழ்வதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்லர். மக்கள் துயரங்களைத் தாமாகவே தேடியறிந்து அவர்களின் துன்பங்களைப் போக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கிருக்கிறது. மக்களுடன் எந்நேரமும் தொடர்பிலிருக்க வேண்டியவர்கள் அவர்கள். மக்களுடனான தொடர்புகள் சரியாகப் பேணப்பட்டிருந்தால் முகாம் மக்களுக்குள் ஏற்படுகின்ற வறுமையை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அதற்கேதுவான மாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களின் துயரத்தை முடிந்தவரையில் துடைத்திருப்பார்கள்.

இந்த உண்மையை உணர்ந்து இனிமேலாவது தமிழரசுத் தொண்டர்களும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொண்டர்களும் மக்கள் பிரதிநிதிகளும் தமக்காக மட்டும் உழைக்காமல் மக்களுக்காகவும் உழைக்க முன்வரவேண்டும். சுறுசுறுப்பாகச் செயற்படுகின்ற தொண்டர்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் முன்மாதிரியாகக்கொண்டு தங்களைச் செப்பனிட்டுக்கொள்ள வேண்டும். தம்மைச் சுற்றி வாழ்பவர்களின் இன்பதுன்பங்களில் பங்குகொள்ள வேண்டும். அது இன்றைய காலத்தின் மிக முக்கிய தேவையாக ஆகியுள்ளது.

# ACTIVA I இன் ஸ்கூட்டர் உயர்தன்மையும் அதன் பயன்பாடும்

புத்துருவாக்கங்களை புதிய புதிய மாற்றத்துடன் உருவாக்கி, சந்தைபடுத்தலில் தன் நிகரற்ற தன்பணியை தொடர்ந்து, இன்று பல வாடிக்கையாளர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்று, மாற்ற முடியாத சந்தைப் பெயரையும் கொண்டு நாளுக்கு நாள் தன் படைப்புக்களுக்கான கேள்வியை அதிகரித்துக் கொண்டு உலகில் எல்லாத் திசைகளிலும் தன் படைப்புக்களை ஜொலிக்க வைத்துகொண்டிருக்கின்ற ஒரே நிறுவனம் ஹொண்டா ஆகும்.

இதனடிப்படையில் ஸ்கூட்டர் வாகனத்துறையில் சமீபத்தில் இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட Activa I இவர்களின் சாதனையை மீண்டும் நிருபித்து ஹொண்டா நிறுவனத்தை பலப்படுத்தியது என்று குறிப்பிட்டால் அது மிகையர்கது.

இந்த Activa I ஆனது ஹொண்டா எகோ தொழிநுட்பத்துடன் கூடிய சுற்றாடலுக்கு இசைவாகவும், 110CC என்ஜினை கொண்டதும், அதிகூடிய எரிப்பொருள் சேமிப்பைக் கொண்டதும், அதுமட்டுமல்லாமல் கொம்பிப்ரேக் கொண்டமைந்து இருப்பதால் குறைந்த தூரத்தில் பாதுகாப்பாக நிறுத்தக் கூடியதுமாகக் காணப்படுகின்றது. மேலும் குறைந்த நிறையை கொண்டு இவ்வாகனம் காணப்படுவதால் இதனைப் பாவிப்பதும், கையாள்வதும் இலகுவானது.

இன்றைய இலங்கையில் இருகின்ற அநேக மோட்டார் வாகன வாடிக்கையர்ளர்கள் நினைப்பது என்னவென்றால் பெற்றோலில் ஸ்கூட்டர் வாகனம் அதிகளவு தூரம் பயணம் செய்யாது என்பதாகும்.

எனவே அச்சிந் தையை முறியடிப்பதற்காக Activa I ஸ்கூட்டர் வாகனம் ஹொண்டா நிறுவனத்தால் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகவே அதிக தூரம் பெற்றோலில் ஸ்கூட்டர் வாகனம் ஓடாது என்ற எண்ணத்தை வாடிக்கையாளர்களிடம் இருந்து நீக்குவதற்காக அவர்களைக் கொண்டே ஓர் பரீட்சையை Stafford நிறுவனம் முன்னெடுத்தது.

இதனை ஒரு சுவாரஸ்யமான விதத்தில் வினாவிடை மூலம் கண்நோக்குவோமானால்,

1. Activa I ஸ்கூட்டர் வாகனம் பெற்றோலில் அதிகதூரம் செல்லும் என்பதை Stafford நிறுவனம் எவ்வாறு நிரூபித்தது?

ஹொண்டா குழுவினர் ஒரு தலைநகரைத் தெரிவு செய்து அங்கு சென்று ஒரு பாவனையாளரின் ஸ்கூட்டரைத் தெரிவு செய்து ஹொண்டா நிறுவனத்தின் பணியாளரும் வாகனத்தின் உரிமையாளரும் சேர்ந்து ஓர் பரிசோதனையை மேற்கொண்டனர். அது என்னவெனில், ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு இருவரும் பிரயாணம் மேற்கொண்டு ஒரு ML (மில்லிலீற்றர்) இல் எத்தனை மீற்றர் ஓடும் என்பதனை பார்த்து ஒரு லீற்றர் இல் எத்தனை KM ஓடும் என்பதை அறிந்துக் கொண்டனர். இதன் விளைவாக Activa I ஸ்கூட்டர் வாகனமானது ஒரு லீட்டர் ø Ã 60KM ஓடும் என நிறுவனத்தார் எதிர்பார்த்தனர் ஆனால் வாகனமானது ஒரு லீற்றர் இல் 75KM வரை பயணித்தது. இது ஹொண்டா நிறுவனத்தார் நினைத்ததை விட அதிகமான பெறுபேற்றைக் கொடுத்தது. இந்தப் பரிசோதனையின் மூலம் பாவனை யாளர்கள் மிகவும் இன்ப அதிர்ச்சி அடைந் தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே இதன் மூலம் பாவனையாளர்கள் இதனால் சொல்வது என்னவெனில் இதுதான் அதாவது, Activa I ஸ்கூட்டர் வாகனம்தான் அதிக KM பெற்றோலில் ஓடும் வாகனம் என்பதாகும். இது ஹொண்டா நிறுவனத்தின் புகழை மேலும் மெருகூட்டியது.

2. இப் பரிசோதனையானது இலங்கையில் எந்த எந்தப் பாகங்களில் நடாத்தப்பட்டது?

Stafford நிறுவனத்தினால் பல பாகங்களில் நடாத்தப்பட்டது. அதாவது, திருகோணமலையில் ஆரம்பித்து அனுராதபுரம், குருநாகல், களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கொழும்பு போன்ற இடங்களில் நடாத்தப்பட்டது.

3. Stafford நிறுவனத்தின் மூலம் நடாத்தப்பட்ட இப் பரிசோதனையில் கலந்து கொண்ட வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கப் பெற்ற சலுகைகள் என்ன?

இவ்வாறு ஒவ்வொரு பகுதிகளிலும் நடாத்திய பரிசோதனையில் ஒரு நாளில் பங்கேற்ற வாடிக்கையாளர்களுள் 5பேரைத் தெரிவு செய்து பெறுமதிமிக்க பரிசுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அதுமட்டுமன்றி குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இப் பரிசோதனையில் பங்குபற்றும் வாடிக்கையாளர்களுள் ஒருவரை குழுக்கல் முறையில் தெரிவு செய்து அவருக்கு ஹொண்டா நிறுவனத்தின் மூலம் Activa I ஸ்கூட்டர் வாகனம் ஒன்று பரிசாக வழங்கப்படும். இக் குலுக்களில் தெரிவாகும் நபர் பற்றிய விபரங்கள் Daily News மற்றும் Facebook, Honda.lk இணையத்தளத்திலும் வெளியாக்கப்பட்டு வருகின்றது. மேலும் யாழ்பாணத்திலும் இப் பரிசோதனையை மேற்கொள்ள Stafford நிறுவனம் எதிர்பார்த்துள்ளது. அதாவது அங்கு உள்ள எல்லா ஸ்கூட்டர் வாகனத்தையும் பரீட்சித்து பார்க்க நிறுவனம் ஆவலாய் உள்ளது.

எனவே இந்தப் பரீட்சையின் போது Activa I சிறந்து விளங்கி அதிகதூரம் ஓடும் வாகனமாக இருப்பதால் இன்று இதை அநேகர் ஏற்று கொள்கின்றனர் என்பது மாற்ற முடியாத உண்மையாகும்.

நீங்கள் பெற்றோலில் அதிகதூரம் ஓடும் ஸ்கூட்டர் வாகனத்தை தெரிவு செய்பவராக இருந்தால் இதை நிருபித்த Activa I யை தெரிவு செய்வீர்களா? அல்லது மற்றைய ஸ்கூட்டர் வாகனங்களை தெரிவு செய்வீர்களா? தெரிவு உங்கள் கையில் உள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்!

**Advertorial**

சான்றுப்படுத்த நாங்கள் தயார்!
குறைந்த எரிபொருள் பாவனையைக்கொண்டது
ஹொண்டா ஸ்கூட்டர்கள்.

HONDA

நீங்கள் பெருமைக்கொண்ட ஹொண்டா அக்டிவா, டியோ, ஆக்டிவா 'ஐ யின் வாடிக்கையாளராயின், குறைந்த எரிபொருள் பாவனையினைக் கொண்டது ஹொண்டா ஸ்கூட்டர்கள்தான் என்பதினை, சிறப்பு தேர்ச்சி பெற்ற ஹொண்டா குழுவின் மூலம் அறிந்துக்கொள்ளும் வாய்ப்பு!

நீங்கள் ஓடிப்பார்த்து! உங்கள் முன்னிலையில்! நாங்கள் சான்றுப்படுத்துவோம்!
குறைந்த எரிப்பொருள் பாவனையினைக்கொண்டது உங்கள் ஸ்கூட்டர் என்பதினை.




விற்பனை விலை : ரூபா . 178,125 + வரி
விற்பனை விலை : ரூபா . 189,732 + வரி
விற்பனை விலை : ரூபா . 195,982 + வரி

ஹொண்டா அக்டிவா, டியோ, ஆக்டிவா ஐ, அறிவுள்ளோரின் தெரிவு.....

திகதி : 26 மற்றும் 27 ஒக்டோபர் 2014, காலை 9 மணி முதல்
இடம் : ஹொண்டா வேர்ல்ட், இல; 214, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (சனச வங்கிக்கு அருகில்)
புளு ஸ்கை ஏஜன்சி, இல; 173, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம்.

பங்குபெறும் முதல் 200 நபர்களுக்கு ஹொண்டா இலட்ச்சினை பொறிக்கப்பட்ட டி-ஷர்ட் இலவசமாக வழங்கப்படும்.

பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200. மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய. தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல 425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு தொ.பே: 065-7607200
53602

## ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் உயர் கல்வியைத் தொடர வாய்ப்புகள்

IIS CITY CAMPUS

நீங்கள் A/L பரீட்சைக்கு தோற்றியவரா? ஏன் உங்கள் உயர்கல்வியை ஆஸ்திரேலியா அல்லது நியூசிலாந்து நாடுகளில் தொடரக்கூடாது? இலங்கையில் உள்ள முன்னணி பல்கலைக்கழக பிரதிநிதியான EDLOCATE நிறுவனம் யாழ்ப்பாணத்திலுள்ள IIS City Campus நிறுவனத்துடன் இணைந்து மீண்டுமொருமுறை ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் உங்கள் உயர்கல்வி தொடர்பான வாய்ப்புக்கள் பற்றிய நேரடிக் கலந்துரையாடல் அமர்வுக்கு ஒழுங்கிணைவை ஏற்படுத்தியுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னரும் இதுபோன்ற நிகழ்வை ஒழுங்குபடுத்தி ஆஸ்திரேலிய பல்கலைக்கழக பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தனர். அந்தத் தருணத்தில் உங்களில் பலர் A/L பரீட்சைக்குத் தோற்றி விடுமுறை காலத்தை வேறு விடயங்களுக்கு பயன்படுத்தியிருப்பீர்கள். ஆனால் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வாய்ப்பு நிச்சயமாக உங்களுக்கு பயனுள்ள ஒன்றாக இருக்குமென நம்புகின்றோம்.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் தற்போது Engineering, Science, Accounting, Construction Profession & Town planning, Helth profession போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அந்த நாட்டில் தங்கி வேலை செய்வதற்கு தகுந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அத்துடன் இவ்விரு நாடுகளில் தமது பல்கலைக்கழக படிப்பை மேற்கொள்ளும் இளம்பட்டதாரிகளுக்கு கல்வி முடிந்த பின்னர் Post Study Visa வழங்குவதன் மூலம் வேலை வாய்ப்பை வழங்குவதோடு வேலைக்குப் பின்னரான நிரந்தர குடியுரிமையையும் இலகுவில் பெற வழிவகுக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடல் நிகழ்வுக்கு ஆஸ்திரேலியாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான Macquarie மற்றும் University of Sydney இன் விசேட பிரதிநிதிகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளனர். இந்த துறைசார் வல்லுநர்கள் மூலம் Engineering, IT மற்றும் Science பாடநெறிகள் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வது மட்டுமல்லாது தகுந்த திறமை மிக்க மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும் வழங்கும் வாய்ப்பும் வழங்கப்படுகின்றது.

இவர்களது இந்த சந்திப்பின் மூலம் பின்வரும் விடயங்களை நீங்கள் விரிவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

1. எமது Edlocate நிறுவனத்தினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்ற 20க்கும் மேற்பட்ட ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் நியூசிலாந்தில் 3 பல்கலைக்கழகங்கள் uniTEC போன்றவற்றில் கற்கை நெறிகள் தொடர்பான தகவல்கள்.
2. Edlocate இனால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் 6 மலேசியப் பல்கலைக்கழகங்களின் முன் கல்வித் திட்டங்களினூடாக ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள்.
3. கொழும்பிலுள்ள CINEC நிறுவனத்தினால் தேர்வு செய்யப்பட்ட 2 வருட கால Engineering கற்கை நெறிகளை மேற்கொள்வதன் மூலம் ஆஸ்திரேலிய University of Adelaide இல் இறுதியாண்டைத் தொடரும் சந்தர்ப்பங்கள் மற்றும் கொழும்பிலுள்ள IIHS நிறுவனத்திலும் அதே போல் 2 வருட முன்கல்வி திட்டத்தை மேற்கொள்ளும் மாணவர்கள் Nursing மற்றும் Medical Science பாடநெறிகளை University of South Australia வில் இணைந்து இறுதியாண்டைப் பூர்த்தி செய்ய முடியும்.
4. தகுந்த தகைமைகள் பெறுபேறுகள் இல்லாத மாணவர்கள் சில Foundation (முன்கல்வி) கற்கை நெறிகள் பயில்வதன் மூலம் பல்கலைக்கழகங்களில் கிடைக்கப் பெறும் வாய்ப்புக்கள்.
5. நியூசிலாந்தின் முன்னணி 3 பல்கலைக்கழகங்களிலும் PhD கற்கை நெறியை தொடரும் மாணவர்கள் மிகக் குறைந்த கட்டணம் மூலமாக (Domestic Student Fee) கல்வியைத் தொடரும் அரியவாய்ப்பு.
6. A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் உங்கள் பெறுபேறுகளுக்கு முன்னரே 2015 ஆம் ஆண்டுக்குரிய உள்வாங்கல்களுக்கு விண்ணப்பிக்கலாம். அத்துடன் அந்தக் காலப் பகுதியில் முற்றும் இலவசமாக IELTS வகுப்பு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
7. இத்தகைய விளக்கங்களுடன் விசா பெறுதல், தங்குமிட வசதிகள், கற்கை நெறிகளின் செலவுகள், குடும்பத்தினர் சென்று பார்வையிடல் மற்றும் அனைத்து தேவையான விடயங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

கலந்துரையாடல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணி முதல் 2 மணி வரைIIS City Campus, இல. 200 சிவன் பண்ணை வீதியில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதற்கென தமிழ்பேசும் ஆலோசகர்களும் பங்குபெறுவர்.

# விதைகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் புதிய திட்டம்

யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் காலபோகம் இன்றி தொடர்ச்சியான முறையில் விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்குரிய புதிய திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி விதைகளையே விவ சாயிகளுக்கு போகங்களுக்கு ஏற்ப விநியோகித்து வருகின்றோம்.

போதிய விதைகளை உற்பத்தி செய்து தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்வதற்கு புதிய திட்டம் ஒன்றைச் சங்கம் மேற்கொள்ளவுள்ளது.

அதேவேளை எமது குடாநாட்டு மரக்கறி உற்பத்தி விதைகளுக்கு நாட்டின் ஏனைய மாவட்டங்களில் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆதலால் குடாநாட்டு விவசாயிகளின் உற்பத்திக்கான விதைகளை ஈடு செய்து ஏனைய மாவட்டங்களுக்கும் விதைகளை அனுப்பி வைக்க முடியும். தற்போது சங்கம் இதற்கென புதிய திட்டம் ஒன்றை மேற்கொண்டு விதைகளைக் கூடுதலாக உற்பத்தி செய்யவுள்ளது. இதற்கென சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட விவ சாயிகள் ஊடாக மரக்கறி விதைகளை உற்பத்தி செய்து அவர்களிடம் இருந்து அவற்றைப் பெற்று சந்தைப் படுத்தவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. மரக்கறி இனங்களின் போகங்களை கருத்தில் கொள்ளாது தொடர்ச்சியாக போதி யளவு மரக்கறி விதைகளை உற்பத்தி செய்து சந்தைப் படுத்தவும் சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (வ-17)

## மாணவருக்கு ஊக்குவிப்பு

கரணவாய், ஒக்.26

உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றி 5 ஆம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மூன்று மாணவர்கஞ்க்கு உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகத்தால் கல்வி ஊக்குவிப்புக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலையின் ஆசிரியர்தின நிகழ்வு அண்மையில் வித்தி யாலயத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் வைத்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களான பருத்தித்துறைக் கோட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்ற பே. சதுஜா (188 புள்ளி),கோட்ட மட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற த.குகேசன்- (177 புள்ளி) மற்றும் ர. வேணுயா-(159 புள்ளி) ஆகிய மூவருக்குமே கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டன.

இதேவேளை பாடசாலையின் அபிவிருத்திக்கென ஒரு தொகைப் பணத்தையும் கழகம் அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-108)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடல்

அரச திணைக்களங்களிலும் பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி பிரதேசத்தில் டெங்கு நோய்த் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரச திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்களுடனான விழிப்புணர்வுக் கலந் துரையாடல் வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த வளவாளர்கள் கலந்து கொண்டு டெங்கு ஒழிப்பு தொடர்பான கருத்துரைகளை வழங்கினர். திணைக்களத் தலைவர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் தத்தமது திணைக்கள உதவி உத்தியோகத்தர்களுடனும் பாடசாலை மாணவர்களுடனும் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு குறித்து கலந்துரையாடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-7)











# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

**வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.**

**வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.**

**தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.**

**பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.**

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!
நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- ☐ பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- ☐ நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- ☐ திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- ☐ பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- ☐ திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- ☐ பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- ☐ பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- ☐ பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- ☐ மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- ☐ திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- ☐ பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- ☐ திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk


micromax
nothing like anything
செவிக்கினிய பாடல்களை கேளுங்கள்
ரு.16,990
விசேட அறிமுக விலை
Canvas FIRE2
புதிய டபிள் ஃபயரிங் ஸ்பீக்கர்கள் சகிதம்
A104 | 1.3 GHz | 11.23cm (4.5) FWVGA | 5MP AF | 1GB RAM | 4GB ROM | 1900mAh
Canvas engage A091
10.16cm (4) WVGA
1.2GHz
SMP AF
4.4.2
ரு.14,990
Unite A092
11.16cm (4) IPS
1.2GHz
SMP
VGA
4.3
ரு.13,990
Unite 2 A106
11.93cm (4.7) IPS
1.3GHz
SMP AF
2MP
4.4
ரு.17,490
1 வருட உத்தரவாதம் | நாடெங்கும் விற்பனை முகவர்கள்
Like us on FB https://www.facebook.com/micromax.srilanka
Get in touch with us at www.micromaxinfo.com/sl
C/17139
அதிகாரமளிக்கப்பட்ட தேசிய விநியோகஸ்தர்
metropolitan
Metro Hubs
M-Centres


LG
Life's Good
மின் தடையானாலும்
குளிர்ச்சியாய்
மின் தடையானாலும்
எவர்கூல்
மின் தடைப்பட்டாலும் குளிர்ச்சியை தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள LG டவர்கட் எவர்கூல் குளிரூட்டி
மின் தடையேற்பட்டாலும்
7
மணித்தியாலங்கள்
தடையின்றி குளிர்ச்சியாய் வைத்திருக்கும்
வட்டியில்லா
15
கொடுப்பனவு
ரூ.52,900
C/17140
நாடெங்கிலும் உள்ள அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெறலாம்.
Abans


1942
எனது தெரிவுக்கான சிறந்த தீர்வு
PRINCE
CROWN
STAINLESS STEEL KITCHEN SINK
"என் வீட்டுக்கு நான் எந்தநாளும் தெரிவு செய்தது, நிறைய நாள் பாவிக்கக்கூடிய நல்ல தயாரிப்புக்களை மட்டும் தான். நீண்ட காலம் பாவிக்கக்கூடியதும், நல்ல தோற்றமும் இருப்பதால் சமையலறைக்கு நான் தெரிவு செய்தது Prince மற்றும் Crown மட்டும் தான்"
Prince மற்றும் Crown சமையலறைக்கு சிறந்த தெரிவு
STAINLESS STEEL KITCHEN SINKS
72" x 18" x 6"
57" x 18" x 6"
51" x 18" x 6"
45" x 18" x 6"
ரூ. 1870/= இலிருந்து
36" x 18" x 6"
30" x 18" x 6"
14" x 14" x 6"
20" x 17" x 6"
36" x 18" x 6"
14" x 14" x 6"
24" x 18" x 6"
24" x 18" x 9"
36" x 18" x 6"
ரூ. 2380/- இலிருந்து
18" x 18" x 6"
18" x 15" x 6"
இலங்கையின் 1
Sinks
0115 225247
நேர்த்தியான முடிவு ■ துருப்பிடிக்காத இரும்பினை (stainless steel)
7 வருட உத்தரவாதம் ■ தெரிவுகள் ஏராளம் ■ இலங்கையின் தயாரிப்பு
C/16681
St.Anthony's
Hardware
574, Sri Sangaraja Mw, Colombo 10. T: 011 2324261-5
www.stanthonys.lk
Reaching for Excellence





சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. பிரதம விருந்தினர் கலாநிதி அ.சக்திவேல் மாணவியொருவருக்குப் பரிசளிப்பதையும் மாணவர்களது கலை நிகழ்வையும் காணலாம். (வ)





தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை ஆண்கள் விடுதித் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஜெயந்தன் விடுதியை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் விடுதிக்கு முதலாவது நோயாளி அனுமதிக்கப்படுவதையும் காணலாம். (வ-36)




உலக அஞ்சல் தினவிழா அண்மையில் சங்கானை அஞ்சலகத்தில், சங்கானை அஞ்சல் அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் மற்றும் சங்கானை விக்னேஸ்வரா பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரிசுப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (வ-29)





கைதடி லயன்ஸ் கழகத்தினர் ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த கைதடி மற்றும் நாவற்குழிப் பிரதேசங்களை சேர்ந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடத்தினர். கழகத் தலைவர் லயன் து.மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் 18 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (வ-9)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சுன்னாகம் பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே கட்டுரை மற்றும் பொது அறிவுப் போட்டிகள் நடத்தப்பட்ட போது. (வ-86)



யாழ்.கொட்டடி சனசமூக நிலையமும், கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்திய முதியோர் தின நிகழ்வில் மூத்தோர் கௌரவிக்கப்பட்ட போது. (வ-135)



வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியா வைரவப்புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் மரக்கறி விதைகள் அடங்கிய பொதிகள் கிராம அலுவலர் ரி.கனகலிங்கம் தலைமையில் விநியோகம் செய்யப்பட்டன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எம்.எம். வொலன்ரினா மரக்கறிவிதை கொண்ட பொதியை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் எ.சிவபாதசுந்தரத்துக்கு வழங்குவதையும் பயனாளிகளில் ஒரு பகுதியினரையும் காணலாம். (வ-421)

# தெல்லிப்பழை மருத்துவமனையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வு

அளவெட்டி, ஒக்.26

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை புற்று நோய்ச் சிகிச்சைப் பிரிவில் திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாநாட்டு மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வு அனுட்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மேற்படி பிரிவில் சிகிச்சை பெற்று வரும் சிறுவர்கள் அவர்களின் சகோதரர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், மருத்துவ மனையின் மருத்துவர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. மங்கல விளக்கை ஓய்வு பெற்ற வட கிழக்கு நில அளவைப் பணிப் பாளர் ஏற்றி வைத்தார் தொடர்ந்து ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் இராசேந்திரம், லயன் டாக்டர் தியாகராசா, பீபிள் லீசிங் வடபிரதேச முகாமையாளர் எம்.ஆனந்தராசா, மருத்துவமனை நிர்வாக உத்தியோகத்தர் திருமதி பி.தவராசசிங்கம், புற்று நோய் விடுதி வைத்தியர் கே.மகேந்திரன் ஆகியோரும் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர். தொடர்ந்து சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்ச்சியும், சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் பாட்டு, கவிதை, நடனம் மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்களின் பாடல், கவிதை, நடனம் என்பனவும் இடம்பெற்றன. இறுதியாக நிகழ்வில் கலந்து வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வடகிழக்கு பிராந்திய நில அளவைப் பணிப்பாளர் நாயகம் வழங்கிக் கௌரவித்தார். (வ-36)

இந்த நிகழ் வில் கைதடி நவீல்ட் பாட சாலை மாணவர்களின் இசை நிகழ்ச்சியும், சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் பாட்டு, கவிதை, நடனம் மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்களின் பாடல், கவிதை, நடனம் என்பனவும் இடம்பெற்றன








வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூக அபிவிருத்தி செயல் திட்டத்தின் கீழ் வன்னி மாவட்டத்தில் உள்ள வறிய குடும்பத்தைச் சோந்த இளம் பெண் ஒருவருக்கு சுய தொழில் முயற்சிக்காக தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. தீபாவளித்திருநாளையொட்டி கிளிநொச்சி இரத்தினபுரம் கிராமத்தைச்சோந்த சிவனேஸ்வரன் சுதா என்பவருக்கே 33 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (வ-86)

# நாம் நண்பர்கள் அமைப்பால் மாணவருக்கு உபகரணங்கள்

வலி.வடக்கு, ஒக்.26

மல்லாகம், கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் வசித்துக் கொண்டு தமது கல்வியைத் தொடரும் 184 மாணவர்களுக்கு 'கல்வியில்வறுமையினை ஒழிப்போம்" என்ற நன்நோக்கில் செயற்படும் நாம் நண்பர்கள் அமைப்பால் கற்றல் உபகரணங்களும் சிற்றுண்டிகளும் தீபாவளி தினத்தில் வழங்கப் பட்டன.

தொழிலதிபர் லோகேஸ்வரன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் தமது மகன் 176 புள்ளிகள் பெற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தமையை முன்னிட்டு வழங்கிய உதவியின் அடிப்படையில் போரால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையத் தில் வாழும் மாணவர்களும் சிறப்பான கல்வியைப்பெற வேண்டும் என்ற நன் நோக்கில் இந்த கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் லயன் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் மற்றும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் விநோத், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் இல. நிஷாந்தன் ஆகியோருடன் 'நாம் நண்பர்கள்' அமைப் பின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் 'நாம் நண்பர்கள்' அமைப்பின் வேண்டுகோளின் பேரில் யாழ்.இந்துக் கல்லூரி வழிகாட்டல் ஆலோசனை சேவைப் பிரிவின் ஆசிரியர் நா.கு. மகிழ்ச்சிகரன் மற்றும் சென் ஜேம்ஸ் பாடசாலை ஆசிரியர் இக்னேஷியஸ் ஆகியோரால் மாணவர் களை மகிழ்வூட்டும் அரங்க ஆற்றுகை நிகழ்வும் மேற் கொள்ளப்பட்டது.

இந்தச் செயற்பாடு ஏனையவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என்றுதெரிவித்த கோணப்புலம் நலன்புரி நிலையத்தவர்கள் இந்தத் தீபாவளித் தினத்தை எவ்வாறு கொண்டாடுவது என்று ஏங்கிய தமது குழந்தைகளுக்கு இவ்வாறு மிகப்பெரிய நிகழ்வை நடத்தியமை குறித்து தமது மகிழ்ச்சியையும் நன்றிகளையும் வெளிப்படுத்தினர். (வ-86)

**பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இரும்பு மற்றும் இயந்திரங்களின் பாகங்கள் விற்பனைக்கான விலை மனு கோரல்**

ஒட்டப்பட்ட கவரில் விலையைக் குறிப்பிட்டு **2014/10/28** திகதிக்கு முன் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரதான காரியாலயத்திற்கு அல்லது கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு வந்து சமர்ப்பிக்கவும்.

**பார்வையிடல்:**

2014 ஒக்டோபர் 27ம் திகதியிலிருந்து 2014 ஒக்டோபர் 28ம் திகதிவரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை யாழ்ப்பாணத்தில் கீழ் குறிப்பிட்ட விலாசத்திலுள்ள மின்சார சபையில் நடைபெறும்.

டென்டர் ஒன்றிற்கு மீளளிக்கப்படாத ரூபா 1000/= பணத்தைச் செலுத்த வேண்டும்.

**நோதர்ன் பவர் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டெட்**
**பவர் ஸ்டேஷன் ரோட், சுன்னாகம்**
**யாழ்ப்பாணம்**

மேலதிக விபரங்களுக்கு:
(சி/17149)(4.3.6) திரு.அத்துபத்து - 0773 452 320
கொள்ளுப்பிட்டி பிரதான காரியாலயம் - 0112 473 677
FLEX Graphic

# கலைப்பீடத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மொழியியல் ஆங்கிலச் சமூகத்தினரால் நடத்தப்படும் வருடாந்த நிகழ்வுகளில் முதலாவதாக சோ. பத்மநாதனால் மொழிபெயர்ப்பு நுட்பங்கள் சாத்தியப்படுகளும், சவால்களும் என்ற தலைப்பில் விரிவான பேச்சும், அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் நாளைமறு தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை கலைப்பீடத்திலுள்ள 410 எண் அறையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு மொழியியல் ஆங்கில சமூகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஓ)

# சரஸ்வதி முன்பள்ளி புதிய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.26

கொக்குவில் கிழக்கு சரஸ்வதி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக சட்டத்தரணி சி. ஞானலோஜினியும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதனும், யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதனும்,தொழிலதிபர் மு. பரந்தில்லைராஜாவும் கலந்து கொள்வார்கள். (ஓ-ரி)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.26

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக றட்ணம் பவுண்டேசன் தலைவர் கலாநிதி இ. நித்தியானந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதிஎஸ். ஆர். சத்தியயேந்திரம் பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ஓ-ரி-10)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மன்னார்/இலுப்பைக்கடவை மகாவித்தியாலயத்தின் அதிபர்
**த.கோகிலராஜா**
அவர்கள் இந்த வருடம் இரண்டாவது தடவையாக மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த அதிபருக்கான
**ஆசிரியர் பிரதீபா பிரபா**
விருதினைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(53489)

ஆசிரியர் நலன்புரிகழகம்
மன்/ இலுப்பைக் கடவை மகாவித்தியாலயம்.




**சேவைநலன் பாராட்டு**




யாழ். பல்கலைக்கழகத்தில் 01.12.1993 இல் பாதுகாப்பு உத்தியோகத்தராக இணைந்து எமது திணைக்களத்தில் 21 ஆண்டுகள் அன்புடனும், பண்புடனும் பணியாற்றி இன்று 26.10.2014 தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெறும்
**D.T.எட்வின் அரசரத்தினம்.**
(பாதுகாப்பு உத்தியோகத்தர் அதிவிசேட தரம்)
அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரின் ஓய்வுக்காலத்தில் தம் குடும்பத்தினருடன் உடல், உள, ஆரோக்கியத்துடன் வாழவாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துபவர்கள்:
**பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிகூட்டுறவுச்சங்கம்,**
(53470)(3.6.4) **யாழ். பல்கலைக்கழகம்.**

**சேவைநலன் பாராட்டு**



யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்புத் திணைக்களத்தில் 03.03.1980 இல் இணைந்து கடந்த 35 ஆண்டுகள் சேவையாற்றி எம்மோடு அன்போடும் பண்போடும் எமது சங்க வளர்ச்சிக்கும் திணைக்கள வளர்ச்சிக்கும் ஆலோசனை வழங்கி சேவையாற்றிய எமது மூத்த உறுப்பினர்
**நாகமணி இராஜரட்ணம்**
[பாதுகாப்பு உத்தியோகத்தர் அதிவிசேட தரம்]
அவர்கள் 26.10.2014 ஞாயிற்றுக்கிழமை தனது அகவையில் ஓய்வுபெறும் இவரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், தனது ஓய்வுக் காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்: பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.
**யாழ்.பல்கலைக்கழகம்.**
(53471)(12.3.6)

**Study Abroad Spot Assessment**



REGISTER NOW | FREE ENTRY
29th OCTOBER 2014 @ TAJ SAMUDRA HOTEL
From 11.00 a.m - 5.00 p.m
NEW ZEALAND / AUSTRALIA
MALAYSIA / CANADA
U.S.A / UK
ORGANIZED BY CDUK
SPOT ASSESSMENTS FOR FEBRUARY - SEPTEMBER 2015 INTAKES
WE REPRESENT MORE THAN 200 UNIVERSITIES
Call us on:
077 824 6666 / 077 147 5555
www.cduk.lk
MBA NURSING ACCOUNTING
I.T. MARKETING BIO SCIENCE
ARTS MANAGEMENT PHARMACOLOGY
LAW COMPUTING ENGINEERING
PHD BUSINESS
(சி.17149)
PLEASE VISIT THE FAIR WITH YOUR ORIGINAL CERTIFICATES AND A SET OF PHOTOCOPIES

**பிறந்தநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்**




எமது பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்க ஸ்தாபகரில் ஒருவரும் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்னோடியும் திணைக்களத்தின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றிய எமது நண்பருமான
**நாகமணி இராஜரட்ணம்**
(பாதுகாப்பு உத்தியோகத்தர் அதிவிசேட தரம்)
அவர்கள் இன்று (26.10.2014) தனது 59ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார்.
இவரை நாம் மனதார வாழ்த்துவதுடன்,
இவரின் சேவையையும் பாராட்டுகின்றோம்.
இவர் தனது ஓய்வுக்காலத்தில் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர் : **நண்பர்கள்,**
**பாதுகாப்புத் திணைக்களம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**
(53469) (7.6.3)

**தீராத நோயைத் தீர்க்கும் ஆதிவாசி பரம்பரை மூலிகை வைத்தியம்**

தீராத நோயைத் தீர்க்கும் வைத்தியர் **குருஜீ கிருஷ்ணர் ராஜ்**
**இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்**
**கடந்த 18 ஆண்டுகளாக வைத்தியம் பார்த்து வருகிறார்.**

மூலிகை சிகிச்சையில் குணமாக்கப்படும் நோய்கள்:



முடி உதிர்தல், சிக்கன் குனியாவால் காய்ச்சல், தீராத கை-கால் வலி, ஆஸ்துமா, அலர்ஜி, உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க, மூட்டு வலி, பயம், ஞாபக சக்தி, பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சினைகள், புற்றுநோய், மூளைக் காய்ச்சல், மலேரியா, தோல் வியாதி (சொரியாசிஸ்), சர்க்கரை வியாதி, சிறுநீரகக் கோளாறு, இருதயக் கோளாறு, பக்கவாதம், நரம்புத் தளர்ச்சி, தலை வலி, காய்ச்சல், சரவாங்கி, இரத்தக் கொதிப்பு, வாயுக் கோளாறு, உஷ்ணம், நரம்பு வாதம், அல்சர், வயிற்று வலி, இடுப்பு வலி, காக்கா வலிப்பு, ஆண்மை குறைவு, வெட்டைச் சூடு, ஜன சூடு, உள் மூலம்-வெளி மூலம், பகந்தரி மூலம், கை-கால் குடைச்சல், கழுத்து வலி, முகப்பரு, தேமல், வெண் குஷ்டம், டி.பி., வாதம், மஞ்சள் காமாலை, கண்-காது பிரச்சினைகள், தொண்டை நோய்கள், ஆறாத காயங்கள், மூளைக் காய்ச்சல், உட்பட 360இற்கும் மேற்பட்ட வியாதிகளுக்கு பக்க விளைவுகள் இல்லாத மூலிகைச் சிகிச்சைகளால் சிறந்த முறையில் குணமாக்கப்படுகிறது.

காலம் : 26.10.2014 தொடக்கம்...
(53436)(7.6.3) தொடர்பு : 077 547 6635
இடம் : இல. 6, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
நேரம் : காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை
அனைவரும் வருகை தந்து பயன் பெறுக.

**விநியோக முகவர்கள் (Distributor)**

ISO மற்றும் SLS சான்றிதழ்களைப் பெற்ற அனைத்து கேபிள் மற்றும் பாகங்களை 30 வருடங்களுக்கு மேலாக உற்பத்தி செய்து விநியோகிப்பதில் முன்னோடி நிறுவனமான வரையறுக்கப்பட்ட கமல் கேபிள் (தனியார்) நிறுவனத்தின் விநியோக வலையமைப்பை நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்துவதற்காக புதிய விநியோக முகவர்கள் கீழுள்ள பிரதேசங்களில் தேவைப்படுகின்றனர்,

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்

அழையுங்கள் : 076 547 0341, 077 339 3561

விண்ணப்பதாரிகள் கீழுள்ள வசதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
* தேவையான மூலதனத்தை முதலிடும் வசதியைக் கொண்டிருத்தல்.
* செல்லுபடியான வங்கிப் பிணையை வழங்கக்கூடிய வசதி
* களஞ்சியப்படுத்தல் மற்றும் காரியாலய வசதி
* பண்டங்களை விநியோகிப்பதற்கான வாகன வசதி

நாம் உங்கள் முதலீட்டிற்கு அதிகூடிய இலாபத்தினைப் பெற்றுத் தருவோம்.
இவ்விளம்பரம் பிரசுரமான நாளிலிருந்து 14 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.
(53458)(7.6.3)

KML CABLES
உதவி பொது முகாமையாளர்:
கமல் கேபிள்ஸ் (தனியார்) நிறுவனம்
இல. 56, கந்தவள மாவத்தை, இரத்மலானை.

**உடனடி வேலைவாய்ப்பு**

Metropolitan நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளைக் காரியாலயத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் உடனடியாகத் தேவைப் படுகின்றார்கள். (Jaffna, Kilinochchi, Mullithivu) விண்ணப்பதாரிகள் ஆகக்குறைந்த தகைமையாக O/L or A/L வரை கற்றவராகவும் வேறு தகைமைகளும் விரும்பத்தக்கது. மற்றும் Motorcycle தனது சொந்தப் பெயரில் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் உரிய ஆவணங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

The Manager
Metropolitan Office /Pvt/Ltd
186/22 off Pointpedro Road,
Kurunatha Swamy Lane,
Jaffna.

For Contact:
021 222 0777
077 775 4811
(12.3.6)(C17210)



**St.JOHN THE BAPTIST'S CHURCH (ANGLICAN) NURSERY**
**452, Main Street Chundikuli, Jaffna**

Admission Forms are available for new Admissions. For the year 2015 at our parish Nursery. Children born in the year 2010 & 2011 May apply.

VEN.S.J.JEYAVEERASINGAN,
ARCHDECON OF JAFFNA.

(53450)
(12.3.6)

## நினைவுப் பேருரை

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் வி. சிவசுப்பிரமணியத்தின் நினைவுப் பேருரை நிகழ்வு கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இ. ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும். "நீண்டகால பயன் நிறை கல்வி" என்ற தலைப்பில் ஓய்வுநிலை கல்வி மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராசா உரைநிகழ்த்துவார். நிறைவுரையை மருத்துவர் எஸ். சிவானந்தராஜா ஆற்றுவார். (ஒ-ரி)

THE JOB NET

புலம் பெயர் தொழில் வெற்றிடங்கள்

## சவுதி : அல்-யமாமா

### நிறுவனத்தில் உடனடி தொழில் வாய்ப்பு

| | | |
|---|---|---|
| கனரக வாகன ஓட்டுநர் Heavy Drivers | 20 | ச.ரி. 1000 - 1100 |
| கனரக இயந்திர இயக்குநர் Heavy Equipment operators | 10 | ச.ரி. 1000 - 1200 |

நாணய மாற்று: 1 ச.ரி = ரூ.35/. அறவீடு: அரச அனுமதி பெற்ற கட்டணம். முற்பணம் அறவிடப்படமாட்டாது.

**மத்திய கிழக்கு அனுபவம் அவசியம் இல்லை. கனரக வாகன ஓடுநர் அனுமதிப்பத்திரம், உள்நாட்டு தொழில் பயிற்சி சான்றிதழ்கள் சகிதம் விண்ணப்பிக்கவும்.**

சேவை ஒப்பந்த காலம்: 2 வருடம். கடமை நேரம்: நாளொன்றுக்கு 8 மணி நேரம். வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை. மேலதிக பணி நேர கொடுப்பனவு உண்டு. உணவு கொடுப்பனவு ச.ரி. 200. போக்குவரத்து, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம். ஒப்பந்தக்கால முடிவில் நாடு திரும்ப விமானச் சீட்டு இலவசம். ஏனைய நிபந்தனைகள் யாவும் நாட்டின் தொழிலாளர் சட்ட விதிமுறைக்கு அமைவாகும்.

0711 324 324 cv@thejobnet.lk
0722 324 324 bd@thejobnet.lk

**இல: 445/3, 2ம் மாடி, றி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10.**

## த ஜொப் நெட் குளோபல் த. நிறுவனம்

புலம்பெயர் தொழில் வலையமைப்புகளின் முன்னோடி

**www.thejobnet.lk**

(சி.17181)

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான

IATA

## METRO
Travles & Tours (Pvt) Ltd.

### எமது சேவைகள். . . .

- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
- குழு பிரயாண வசதிகள்
- வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,**
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk

(சி.168881)
(12.3.6)

"பிச்சை எடுத்தும் கற்பன கல்"

## யா/வட்டு இந்துக் கல்லூரி சித்தன்கேணி

### பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு நாளும் - 2014

இடம்: கல்லூரி திறந்த வெளியரங்கு
காலம்: 27.10.2014 திங்கட்கிழமை காலை 09.00 மணி
தலைவர்: கல்லூரி அதிபர்

முதன்மை விருந்தினர்
கலாநிதி இ.நித்தியானந்தன் அவர்கள்
(Chairman, Ratnam Foundation)

சிறப்புவிருந்தினர்
S.R.சத்தியேந்திரம்பிள்ளை அவர்கள்
(உப-பீடாதிபதி, யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி)

கௌரவ விருந்தினர்
J.ரெரன்சன் அவர்கள்
(திட்டமிடல் பொறியியலாளர், Sanken Construction)

ஆசியுரை
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
(சிவன் தேவஸ்தானம், சித்தன்கேணி)

நினைவுப் பேருரை
கலாநிதி கா.கன்னைய் அவர்கள்
(சிரேஷ்ட கணித விரிவுரையாளர், கணித மற்றும் புள்ளிவிவரத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பெற்றோர்கள், நலன் விரும்பிகள், அனைவரையும் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Welcome யா/வட்டு இந்துக் கல்லூரிச் சமூகம் சித்தன்கேணி. Welcome

(55472)(12.6)

கேக் ஐசிங் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 03.11.2014




162, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
மணிக்கூட்டு வீதியிலிருந்து 3ஆம் வீடு.
TP: 021 222 8522, 071 882 8522

## SB TRAVELS & TOURS (PVT) LTD
SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 20,900/- | LONDON | 92,600/- |
| TRICHI | 25,800/- | MALDIVES | 16,900/- |
| CHENNAI | 23,800/- | PARIS | 86,699/- |
| BOMBAY | 28,900/- | TORONTO | 238,200/- |
| BENGALURU | 28,900/- | NEW YORK | 129,999/- |
| KOCHI | 27,500/- | MELBOURNE | 122,600/- |
| DELHI | 46,400/- | PERTH | 108,999/- |
| MALAYSIA | 26,400/- | CANTON | 55,900/- |
| SINGAPORE | 30,200/- | NARITA | 76,899/- |
| BANGKOK | 29,900/- | AUCKLAND | 130,900/- |
| SYDNEY | 112,999/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

INDIAN, BANGKOK MALAYSIA VISA

ONE WAY: DUBAI- 26,000/-, DOHA- 24,500/-, ABUDHABI - 19.500/-, LONDON- 47,400/-

If you want any country air tickets please call our office number.

0771083480,81,82,83 | 0766911080,81,82,83,84,85,86,87,89,90

**NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13.**

(சி.17162)

Tel:2446666, 2444800, 0112540280, 0112333322

E-mail: sbtravels99@yahoo.com , sbtravels99@sltnet.lk

CEYLON THEATRES

### இப்பொழுது திரையில்

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)




**Platinum** 10.30am, 2.30pm, 6.30pm




**Silver** 10.15am, 2.15pm, 6.15pm




(சி.17140)

**Bronze** 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## வெற்றிடங்கள்

### விற்பனைப் பிரதிநிதிகள்
(Sales Representatives)

பிரசித்தி பெற்ற நிறுவனத்தினால் விற்பனை மற்றும் வியாபாரத்துறையில் ஈடுபட்டுள்ள உங்களுக்கான அரிய வேலை வாய்ப்புக்கள்

- நீங்கள் க.பொ.த (சா/த) அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் தோற்றியவராயின்,
- மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தினைக் கொண்டவராயின்,

நீங்கள் 28 வயதிற்கு குறைந்தவராயின், குறைந்த பட்சம் 3 வருட விற்பனைத் துறையில் அனுபவம் கொண்டவராயின், ஹாட்வெயார், எலெக்ரிகல் துறையில் அனுபவம் உள்ளவராயின் விசேட முன்னுரிமை வழங்கப்படும்.

மாதாந்தம் ஆகக் குறைந்தது ரூ. 45000/= வருமானம், கையடக்கத் தொலைபேசி அத்துடன் மோட்டார் சைக்கிள் மற்றும் காப்புறுதி வசதிகளைப் பெற்றுத் தருவோம்.

**பயிற்சி பெறும்**

### விற்பனைப் பிரதிநிதிகள்

நீங்கள் க.பொ.த.(சா/த) அல்லது க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றியவராகவும், வயது 25இற்கு உட்பட்டவராகவும், நீங்கள் தொழில் ரீதியாக எந்தவொரு முன்னனுபவம் இல்லாமலேயே பயிற்சி பெறும் விற்பனைப் பிரதிநிதியாக எமது குழுவில் இணைந்து கொள்ளலாம்.

விண்ணப்பத்துடன் நேரில் வரவும் அல்லது விண்ணப்பியுங்கள்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் :
**வடமாகாணம்** (Northen Province)
**076 547 0341, 077 339 3561**

KML CABLES

**கமல் கேபிள்ஸ் தனியார் நிறுவனம்**
இல. 56, கந்தவள மாவத்தை, இரத்மலானை.
மின்னஞ்சல் : careers@somapalaco.com

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சுந்தரகாந்தா (மல்லி)
தம்பிராசா

தோற்றம் 22.11.1934 மறைவு 31.10.2008

திதி: திருதியை (26.10.2014)

ஆறாண்டுகள்
இமைப்பொழுதில்
கடந்ததம்மா
தீராது எம் கவலை
தேம்புகின்றோம்
உமை நினைத்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை
இறைஞ்சி நிற்கும்......

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அன்புக் கணவர்
சி.தம்பிராசா

(53404)(12.3.6)

## நகைக் கடைக்காரர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ். வணிகர் கழகம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள கழக பணிமனையில் யாழ். மாவட்ட நகைக்கடை உரிமையாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினை கள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு தீர்மானித்துள்ளது. இந்தக் கலந்துரையாடலில் அனைத்து நகைக் கடை உரிமையாளர்களையும் பங்குபற்றுமாறு வணிகர் கழகம் கேட்டுக் கொள்கிறது. (ஒ)

## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி செல்வரட்ணம்



ஐயனார் கோயில் வீதி, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி செல்வரட்ணம் 23.10.2014 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-பார்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான காசியர்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், கண்மணி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுமார், சந்திரகுமார், சித்திரா, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தசாந்தவதி, வனஜா, பரமேஸ்வரன், சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிவேத், நிசானா, கஜானா, துசானா, செபேசா, ஹரிஷ், கோஜிகா, சங்கீதா, துளசி, சஜித்தா, ஹிறிஸ்ஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்.
(கலாமன்ற வீதி)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(53461) (7.6.3)

## மரண அறிவித்தல்



### தம்பு சோமசுந்தரம்

(பிரபல விவசாயி, 3ஆம் வாய்க்கால்-பரந்தன்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சோமசுந்தரம் 24.10.2014 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் சுவர்ணா, கிருஷ்யந்தன் (லண்டன்), விவேகானந்தன்(கனடா), சிவநேசன் (பொறுப்பதிகாரி நெல் ஆராய்ச்சி நிலையம், பரந்தன்), சுகலியா (கனடா), சுகுணா (லண்டன்), சுகிர்தா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரவிக்குமார்(பொறியியலாளர்), கெங்காதேவி(லண்டன்) வளர்மதி (கனடா), வனிதா, யசோதரன்(கனடா), கலாநிதிஅருள்(லண்டன்), இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2014) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை. (சி/17225)(4.3.6) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை கணேசமூர்த்தி

(உரிமையாளர்-Cost Cutter/425 Bromley Road Downham)



யாழ்., அச்சுவேலி, தம்பாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை கணேசமூர்த்தி 16.10.2014 வியாழக்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஐயம்பிள்ளை-மாணிக்கம் (தம்பாலை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை- யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுசிலாதேவி அம்மையார் அவர்களின் அன்புக் கணவரும், திலிப்காந்த், ஜெயகாந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்திய மூர்த்தி (டோகா), கருணா நிதி(இலங்கை), செல்வநிதி(லண்டன்), கலாநிதி(லண்டன்), கிருபா மூர்த்தி (டோகா), தயாநிதி(இலங்கை), விக்கினேஸ்வரமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேணுஜா, ரொமியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், துரைராஜா (ராசு- டோகா), அமிர்தலிங்கம் (காந்தி- லண்டன்), தவராஜா (தயா- லண்டன்), காலஞ்சென்ற சாந்தகுமார்(இலங்கை), வாசன் (பிரான்ஸ்), இராஜசுலோசனா(இலங்கை), குலேந்திரா(இலங்கை), ரஜிதா (கனடா), மஞ்சுலாதேவி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகேந்திரம், மணிமாலா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், கம்சன், ஜதுயா, விதுயா, மதுயா, அஸ்வின், அனிக்ஷா, மயூரன், மதன், சுசான், ரஜிதா, பர்மிலா ஆகியோரின் பெரியப்பாவும், தீபன், தினேஸ், திலக்சன், துளசிகா, நரோசன், தூரிகா, திலீசன், கரிசன், பொன்னுஷா, கிரிசாந், பிரசாந், தக்சிகா, சஜீவன், சபீனா, சாய்ராம், தனுஷா, சுலோசனா, ஜஸ்மினா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஜன், ஜெனிஷா, சாருஸ், கஸ்வின், கஜோஸ், விகாஸ், அஸ்லி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2014) திங்கட்கிழமை லண்டன் நேரப்படி காலை 9.00 மணியளவில் லண்டனில் நடைபெறும். அன்னாரின் அஞ்சலி நிகழ்வுகள் நாளை (27.10.2014) திங்கட்கிழமை அச்சுவேலி தம்பாலையிலுள்ள அவரது இல்லத்தில் 2.30 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திலிப்காந்த்-பிரித்தானியா-+447940900397
ஜெயகாந்த்-பிரித்தானியா-+447958296558
தயா-பிரித்தானியா-+447950553324
நரோசன்-பிரித்தானியா-+447860648938

தம்பாலை, அச்சுவேலி.

தகவல்:
ஐயம்பிள்ளை குடும்பத்தினர்.
077 604 8895

(53553)(4.3.6)

## முதன்முதலாக யாழ். நகரில் விசேட பயிற்சிநெறிகள்

100% Job பெறுவதற்கானது



1. Hotel Management (இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு)
2. Civil Engineering (Construction Technology)
3. Web/Graphics Designers
4. Sales and Marketing
5. Teacher's Training (Pre-School and English)
6. Computer / Networking Technician

விசேட ஆங்கில கற்கைநெறிகள்
- IELTS
- English for Work
- Diploma in English

முதலாவது வருடம் LCBT-Jaffna ⇒ இரண்டாவது வருடம் Newzealand/UK/Canada பல்கலைக்கழகங்கள்

(C/17232)(10.6.3)

**LCBT Campus**

320A 1/2, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
Hotline: 077 505 2643

## வீடு வாடகைக்குத் தேவை

மல்லாகம் சந்திக்கு அருகிலும் கல்வியங்காடு, நீர்வேலி பகுதிகளில் பருத்தித்துறை வீதிக்கு அருகிலும், சங்கானையிலும் மற்றும் இளவாலை, பண்டத்தரிப்பு பகுதிகளிலும் முற்றத்துடன் கூடிய 3 அல்லது 4 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உடன் தேவை.

தொடர்பு: 077 362 7055 (F/17235) (4.6.3)

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூர் அரசடி வீதிப் பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(53604) (40.6.3) தொடர்பு: 077 576 8321

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் மூத்தவிநாயகர் வீதியில் ஒரு பரப்பு 4.50குழி விஸ்தீரணம் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 836 7479 (52711) (7.6.3)

## ஆள்கள் தேவை

பிரபல கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்கு 25 வயதுக்கு மேற்பட்ட ஆள்கள் தேவை.

தொடர்பு: சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ் இல.55, 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (F/17240) (4.6.3)

## தேவை

குருநாகல் நகரில் அமைந்துள்ள சில்லறைக் கடைக்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 886 3346 (50605) (4.6.3)

## தீபாவளி தினத்தை முன்னிட்டு நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - இல. 12204
இரண்டாம் பரிசு - இல. 11020
மூன்றாம் பரிசு - இல. 8575

**ஆறுதல் பரிசுகள்**

| | |
|---|---|
| 1) இல. - 12833 | 6) இல. - 14977 |
| 2) இல. - 6496 | 7) இல. - 12250 |
| 3) இல. - 6299 | 8) இல. - 12156 |
| 4) இல. - 14202 | 9) இல. - 9693 |
| 5) இல. - 3851 | 10) இல. - 14255 |

மேற்படி பரிசில்களை நிர்வாகத்தினரிடம் பெற்றுக் கொள்ளவும்.

செயலாளர்
கலைமதி சனசமூக நிலையம்
கரணவாய் வடமேற்கு, நவிண்டில். (51977) (7.6.3)

## யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கந்தரோடை, சுன்னாகம்.

முன்னாள் அதிபர் அமரர் வைசர் வி.சிவசுப்பிரமணியம் அவர்களின்

18ஆவது ஆண்டு நினைவுப் பேருரை வைபவம் - 2014



தலைவர் : இ.செல்வராசா அதிபர்
காலம் : 27.10.2014 (திங்கட்கிழமை) பி.ப. 1.30 மணி
இடம் : கந்தையா உபாத்தியாயர் மண்டபம்

நினைவுப் பேருரை
விடயம் : நீண்ட கால பயன் நிறை கல்வி
வழங்குபவர் : உருளை எஸ்.தில்லை நடராசா - ஓய்வுநிலை கல்வி மேலதிக செயலாளர்
நிறைவுரை : வைத்திய கலாநிதி எஸ்.சிவராஜேந்திரராஜா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(53479)(7.6.3) வைசர் குடும்ப உறுப்பினர்கள்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

## வவுனியாவில் HONDA VAN விற்பனைக்கு



HONDA VAN
Hu-XXXX (52179) (12.3.6)
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 082 7662

## கணினி தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

**Computer Technician**

எமது நிறுவனத்தில் முழு/பகுதிநேரமாக இணைவதற்கு சிறப்புத்தேர்ச்சிமிக்க கணினி தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

❖ வவுனியா ❖ கிளிநொச்சி ❖ முல்லைத்தீவு ❖ மன்னார் ❖ திருகோணமலை ❖ மட்டக்களப்பு ❖ அம்பாறை

மேற்குறித்த பிரதேசங்களில் வசித்து எமது அணியில் இணைவதற்கு சுயவிபரக்கோவையை உடன் அனுப்புங்கள்

GUNAA BEST PC Computer Repair & Sale
52,Hospital Road, Jaffna. T.P. 0779086737
e.mail : gunaabestpc@gmail.com

## எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) வரையறுக்கப்பட்டது


### பதவி வெற்றிடம்

இலங்கையின் முன்னணி நிறுவனமான எதிர்காலத்தில் பசுமை உலகம் (Future Green World (Pvt.) Ltd.) நிறுவனம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்தும் பொருட்டு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் பிரதேச இணைப்பாளர்கள், இணைப்பு உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது. க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருத்தல் சிறந்தது. மேற்படி பதவிகளுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களில் நீங்கள் விரும்பும் பதவியைக் குறிப்பிட்டு தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் பின்வரும் முகவரிக்கு, 09.11.2014 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

மனிதவள பிரிவு
எதிர்காலத்தில் பசுமை உலகம் (தனியார்) வரையறுக்கப்பட்டது.
இல. 133, கண்டி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம். (53560)(7.6.3)

## மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

செல்லத்துரை இராமநாதன்
(உதவி விவசாயப் பணிப்பாளர் விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்.)



Congratulations

26.10.2014 இன்று 60 அகவையைப் பூர்த்தி செய்து தனது அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுகிறார். இவர் தனது சேவையை 1980ஆம் ஆண்டு ஆரம்பித்து 35 வருட சேவையை வழங்கியுள்ளார். 2006ஆம் ஆண்டு தீவகத்தின் விவசாயப் போதனாசிரியராக வருகைதந்து இன்று உதவி விவசாயப் பணிப்பாளராக உயர்ந்துள்ளார்.

இவர் 9 வருடங்களாக தீவக விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தார். தீவகத்தில் மீள்குடியேறிய விவசாயிகளுக்கு தமது திணைக்களத்தின் ஊடாகப் பல உள்ளீடுகளை இலவசமாக வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தினார். இவர் தனது ஓய்வு காலத்தை குடும்பத்துடன் மகிழ்வாக கழிக்க வாழ்த்தும்.

Best Wishes
வேலணை தெற்கு விவசாய சம்மேளனம் (53562) (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா பரமு



கச்சாயைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பரமு நேற்று (25.10.2014) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பரமுவின் அன்பு மனைவியும், அமிர்தபாசினி, பரமேஸ்வரி சத்தியகலா, பூமலர், அருளானந்தி, அருள் நாதன், அமிர்தசிலோசனா, அருளினி, அருந்தவஜெயந்தி ஆகியோரின் பாசமிகு தாயும், யோகேஸ்வரன், செல்வராசா, சிவகுமார், நேசதுரை, செல்வராசா, சிவாஜினி, ராமஜெயம், ஸ்ரீதரன், குகதயாளன் ஆகியோரின் மாமியும், கேமலதா, கேமறதி, கேசவன், கேமறஞ்சினி, கேதீபன், கேதினி, துசியந்தன், துஷிகரன், சகிலா, கபோதினி, ஜினாபா, சோபனா, நிறோஜனா, நிலக்ஷன், நிதர்ஷி, தனுசா, வர்னுஜன், அக்சயா, அக்சயன், தனுசன், சங்கவி, சலுஜன், இந்துஷா, பவினாஷ் ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணிக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. (சி17237) (12.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 910 3501

## சரவணா ரெக்ஸ் SARAVANA TEX



பண்டிகை காலம் மட்டும் அல்ல அனைத்து நாள்களும் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

Office wear சில்க் சாறி 490/=
Office wear கொட்டன் சாறி 490/=
Office wear கொட்டன் சல்வார் துணி 690/=



திருமண பட்டு சாறிகள், சல்வார் துணிகள் மற்றும் ரெடிமேற் ஆடைகள் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள

- வாடிக்கையாளரின் வசதி கருதி வாரத்தில் எல்லா நாள்களும் வியாபார நடவடிக்கை நடைபெறும்
- வங்கிக்கடன் அட்டைகள் மற்றும் ஏனைய வங்கி அட்டைகள் மூலமும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

சரவணா ரெக்ஸ்

526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.

770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம்.

## தொடர்ச்சிகள்

### பட்டிக்காட்டானின்

தற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நிதியொதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித்தார்.

இதன்போது எதிரணியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசை அச்சுறுத்தும் யானைகள் இருப்பதாக கூறினார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துரைத்த ஜனாதிபதி, அரசை அச்சுறுத்தும் யானைகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்று சிரித்து கொண்டே கூறினார்.

இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்தது. அந்தச் சிரிப்பொலிக்கு மத்தியில் உரையைத் தொடர்ந்த ஜனாதிபதி, வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது பகுதியை வாசிப்பதற்கு முன்னர் இது முக்கியமான பகுதியென்றும் கவனமாகச் செவிமடுக்கவும் என்றும் எதிரணியிடம் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவது பகுதியில், நிவாரணங்கள், முன்மொழிவுகள், சம்பள அதிகரிப்புகள், வரி குறைப்புகள் உள்ளிட்ட வரப்பிரசாதங்கள் அடங்கிய முன்மொழிவுகளை வைத்த போது ஆளும் கட்சியினர் மேசைகளில் தட்டி ஆரவாரம் செய்தனர்.

வரவு-செலவுத்திட்டத்தைச் சுமார் மூன்று மணிநேரம் இடைவிடாது வாசித்த ஜனாதிபதி, மாலை 4.32க்கு உரையை நிறைவுசெய்து விட்டு எதிரணியைப் பார்த்து பட்டிக்காட்டானின் வரவு-செலவுத் திட்டம் எப்படி என்று வினவிவிட்டுச் சபையிலிருந்து வெளியேறிவிட் டார்.

எதிர்க்கட்சிகள் அண்மைக் காலமாக ஜனாதிபதி மஹிந்தவை பய்யா (பட்டிக்காட்டான்) என்ற பட்டப் பெயரில் ஏளனமாக அழைத்து வருகின்ற னர். இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளைப் பார்த்து இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். (த-5)

### ஏமாறத் தயாரில்லை

நாட்டின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகளைக் காண்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட குழுக்கள் நாடாளுமன் றத் தெரிவுக்குழுவுடன் இணைந்து செயற்படுவது அவசியமாகும் என்றும் ஜனாதிபதி மஹிந்த இதன்போது குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்புக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் சம்பந்தனிடம் நேற்று 'உதயன்' வினவிய போதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

"மஹிந்த அரசுடனான பேச்சின் போது நாம் நியாயமான அரசியல் தீர்வைப் பெறுவதற்காக விசுவாசமாகச் செயற்பட்டோம். ஆனால், அந்தப் பேச்சை அரசு குழப்பியடித்தது. அந்தப் பேச்சு முறிவடைந்தமைக்கான முழுப்பொறுப்பையும் மஹிந்த அரசே ஏற்க வேண்டும்.

பல சுற்றுகளாக நடைபெற்ற இந்தப் பேச்சுகளில் தமிழ் மக்கள் சுயாட்சியைப் பெற்று சம உரிமையுடன் வாழக்கூடிய பிரேரணையை சமர்ப்பித்திருந்தோம். ஆனால், இதற்குரிய பதிலை அரசு இன்னும் எமக்கு வழங்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எமக்கு அளித்த வாக்குறுதிகளையும் இதுவரை நிறைவேற்றவில்லை. இதனால் அரசு நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவையும் நாம் நிராகரித்து வருகின்றோம்.

இது இவ்வாறிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருக்கும் வடக்கு மாகாணசபையை முறையாக இயங்கவிடாமல் ஜனாதிபதியும், அரசதரப்பி னரும் தொடர்ந்தும் முட்டுக் கட்டைகளைப் போட்டுக் கொண்டு வருகின்றனர். அதேவேளை, தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் என்றுமில்லாதவாறு இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன. தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காண அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயற்பட வேண்டும் என்று நாடாளுமன்றில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ எமக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

அவரின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட சமர்ப்பண உரையை நாம் உன்னிப்பாக அவதானித்தோம். அந்த உரையில் தம் முடன் இணைந்து செயற்படுமாறு எமக்கு அவர் அழைப்பு மட்டும் தான் விடுத்துள்ளார். ஆனால், தமிழர் பிரச்சினைகளுக்கான தீர்வு வழி தொடர்பில் அவர் எதனையும் குறிப்பிடவில்லை.

எனவே, அழைப்புக்கு அப்பால் சென்று பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணும் வழிகளை அவர் செயல் வடிவில் காட்டவேண்டும்.

நீண்டகாலமாகத் தொடரும் தேசிய பிரச்சினைக்கு நாட்டின் நலன் கருதி - மக்களின் நலன் கருதி அரசுடன் இணைந்து நியாயமான - நிரந்தரத் தீர்வைக் காண நாம் எப்போதும் தயாராகவுள்ளோம். ஆனால், நாம் ஏமாற மாட்டோம். அது நிச்சயம்" - என்றார். (த-சி)

### மோடியை

யைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பு இடம்பெறலாம் என்று நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியத் தன்னார்வத் தொண்டு நிறுவனமான சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம்' வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனைத் தமிழகத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. நினைவுப் பேருரை ஒன்றில் பங்கெடுப்பதற்காக இந்தியா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய எதிர்வரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி அதில் பங்கெடுப் பதற்கு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையினால் இந்திய அதிகாரிகளுக்கு இது குறித்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய குறித்த விடயம் சாதகமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில், நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், அடுத்த மாதம் சந்திப்பு இடம்பெறுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும், சந்திப்புக்குரிய நேரத்தை ஒதுக்கீடு செய்யும் நடவடிக்கைகளில் இந்திய அதிகாரிகள் முனைப்புக் காட்டி வருவதாகவும் தெரிவித்துள்ளது.

நவம்பர் 11 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மூன்று நாடுகளுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். எனவே நவம்பர் 9 ஆம் திகதி, இலங் கையிலிருந்து நேரடியாக டில்லிக்குச் சென்று பிரதமரை சந்திப்பதற்குரிய ஒழுங்குகள் இந்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி கடந்த மே மாதம் பதவியேற்ற பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கடந்த ஓகஸ்ட் மாதம் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பின்போது, வடக்கு மாகாண முதலமைச்சரைத் தான் சந்திக்க விரும்புவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### வடக்கு -

வானிலை அவதான நிலையம் மீனவர்களையும் கடற்படையினரையும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நேற்றுச் சனிக்கிழமை மழையுடன் கூடிய காற்று வீசிய நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமையும் இதன் தாக்கத்தை எதிர்பார்க்கலாம் என்றும் சில பகுதிகளில் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என்றும் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, தென்மேற்கு கரையோரமாக மணிக்கு 10 - 20 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் என்றும் அந்த நிலையம் கூறியுள்ளது.

அத்துடன் காலியிலிருந்து பொத்துவில் ஊடாக மாத்தறைவரையிலும் கொழும்பு, முல்லைத்தீவு, மன்னார், சிலாபம் ஆகிய பகுதிகளில் மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும். இதனால் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் வாழ்வோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் வானிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (த-10)

### ஜனாதிபதியால்

அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் 2015 ஆம் ஆண்டு நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பல்வேறு நிவாரணங்கள் தொடர்பான அறிவிப்புக்களை அடுக்கிச் சென்றிருந்தார். ஆனால் அவரது அனைத்து அறிவிப்புக்களுமே காற்று நிரப்பப்பட்ட பலூன்களாவே பறந்து கொண்டிருந்தன. இந்த விடயத்தை எனது மனைவியால் ஊகித்துக்கொள்ள முடியவில்லை.

வரவு-செலவுத் திட்ட உரை நிறைவடைந்து நான் வீட்டுக்குச் சென்றபோது ஆசிரியையான எனது மனைவி ஓடி வந்து ஜனாதிபதி இவ்வளவு சலுகைகளை அறிவித்து விட்டாரே. எதிர்க்கட்சியினராகிய உங்களால் இனி என்னதான் செய்ய முடியும். உங்களால் எதுவும் பேசமுடியாது போயுள்ளதே எனக் கேள்வி எழுப்பினார்.

அப்போது இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பொதிந்து கிடக்கும் தத்ரூபம் எனது மனைவிக்குப் புரியவில்லை என்பதைத் தெரிந்துகொண்டேன்.

அரசு வரவு-செலவுத் திட்டத்தினூடாக அறிவித்துள்ள நிவாரணங்களை விட மக்களிடத்திலிருந்து பறித்தெடுக்கும் தொகை அதிகமானது என்பது எனது மனைவிக்கு மாத்திரமல்ல இந்நாட்டிலுள்ள பலரும் அறியாதுள்ளனர். அந்தளவுக்கு மாயாஜால வார்த்தைகளால் வரவு-செலவுத் திட்டம் வரையப்பட்டிருக்கின்றது- என்றார். (த)

### பியர்

யாழ்.மாவட்டத்தில் குறிப்பாக 60 வீதத்துக்கு அதிகமாக மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் நிலையில் உள்ளனர். இவர்களுக்கான வேலைவாய்ப்பு என்ன? தொடர் கல்விக்கான உதவிகளை யார் வழங்குவது ? அரசினால் கொடுக்கப்படும் உதவிக் கொடுப்பனவுகள் பொருத்தமானவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்ற நிலைப்பாட்டில் கல்விச் சமூகம் உள்ளது.

அத்துடன் பெண்கள் துஷ்பிர யோகம் செய்யப்படுதல், கொலை செய்யப்படல் போன்ற சம்பவங்கள் அண்மைக் காலங்களாக நடைபெற்று வருகின்றன. இதனைவிட இளைஞர்கள் பியர் போத்தல்களுடன் வீதிகளில் நின்று கூத்தாடுவதை யார் தடுத்து நிறுத்துவது?.

இத்தகைய குற்றச்செயல்கள் எல்லை மீறிப் போய் விட்டன. கட்டுப்பாடற்ற இத்தகைய குற்றங்களைத் தடுத்து நிறுத்தி உரிய முறையில் அறிவுரைகளை வழங்கி அவர்களை மீட்டெடுக்கும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதால் எதுவும் நடைபெறப்போவதில்லை. எனவே எதிர்காலத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு எமது சமூகம் தள்ளப்பட்டுள்ளது. எனவும் சுட்டிக்காட்டினர். (த-14-ரி)

### வங்கிகளிலும்

யினருக்கும் பொலிஸாருக்கும் குறித்த நபர் அறிவித்துள்ளார். எனவே வங்கிகளில் பணம் பெற்றுக் கொள்ளும் போது அந்தப் பணத்தாள்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு நெல்லியடிப் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த ஒருவர் கடந்த 20 ஆம் திகதி நெல்லியடியில் உள்ள வங்கி ஒன்றிலிருந்து 4 லட்சம் ரூபா பணத்தை எடுத்துச் சென்றுள்ளார். பணத்தை அவர் வங்கியில் வைத்து எண்ணிப் பார்க்காது வீட்டுக்குச் சென்று மறுநாள் எண்ணிப்பார்த்து தான் கொடுக்க வேண்டியவர்களுக்குப் பணத்தை எண்ணிக் கொடுக்கும்போதே ஒரு லட்சம் ரூபா பணக்கட்டில் தனித்தனியே இரண்டு போலியான ஆயிரம் ரூபா பணத்தாள்கள் இருந்ததை அவதானித்துள்ளார். அவற்றில் ஒன்று கடுமையாகச் சேதமடைந்திருந்துள்ளது. பணக்கட்டுகளுடன் மறைந்திருந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அந்தப் பணத்துடன் குறித்த வங்கிக்குச் சென்ற குறித்த நபர் அது தொடர்பில் வங்கியினருக்கு எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் வங்கியினால் கொடுக்கப்பட்ட பணம் வங்கியில் வைத்து உடனே தந்திருந்தால் திருப்பித் தந்திருக்க முடியும். ஆனால் வங்கிக்கு வெளியே பணத்தாள்கள் கொண்டு செல்லப்பட்டதனால் அந்தப் போலியான பணத்தாள்கள் வங்கியில் இருந்து தரப்பட்டது என்பதனை வங்கி ஏற்றுக் கொள்ளாது என்ற காரணத்தால் அந்தப் பணநோட்டுகளை வங்கியினால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அதனால் அவர் திருப்பி அனுப்பப்பட்டார்.

வங்கியிலுள்ள பணத்தாள்களை எண்ணும் இயந்திரம் போலியான தாள் என்பதனைக் கண்டறியாது என்று கூறப்பட்டுள்ளது. அது தொடர்பில் குறித்த நபர் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தவிர குறித்த வங்கியில் ஏற்கனவே சில தடவை கள் போலி நாணயத்தாள் கள் வழங்கப்பட்டு பின்னர் திரும்பப் பெறப்பட்டு அதற்குரிய பதில் பணம் கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-108)

### போரின்

கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் என்றவகையில் பெரும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் தருகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போருக்குப் பின்னதான காலப் பகுதியில் வடக்கில் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு பெருந்தொகைப் பணத் தைச் செலவிட்டுள்ளதாக பீற்றிக் கொள்கின்ற ஜனாதிபதி, அந்தத் திட்டங்கள் போரின் ஆறாத வடுக்களைச் சுமந்து நிற்கின்ற - நடைப் பிணங்களாகத் திரி கின்ற மக்களது வாழ்க்கையைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றதா, அவர்களது எதிர்காலம் தொடர்பில் நம் பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றதா? என்பதை ஆய்ந்து அறிய முயற்சித்திருக்கின்றாரா என இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்கின்றேன்.

மக்கள் மத்தியில் வாழ்ந்து, அவர்களது தேவைகளை அறிந்து குறைகளை உணர்ந்து கொண்ட பிரதிநிதி என்ற வகையில் அபிவிருத்தித் திட்டங்களின் பலாபலன்கள் மக்களுக்கு இன்னமும் கிட்டவில்லை என்பதே நிஜமானது - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

### இந்த

றுக்குள்ளாகியிருப்பர் என்ற அடிப்படையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (த-4)


# கொக்குவில் இந்துவை தோற்கடித்து இறுதியாட்டத்துக்கு யாழ். இந்து மகளிர்

யாழ்ப்பாணம்,ஒக்.26
கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி.


கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாவது வருடமாக நடத்தும் கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 18 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்துமகளிர்கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

முதல்கால்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கினர். ஆட்டம் தொடங்கி 5 நிமிடத்தில் மழை பெய்ததனால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது. ஆட்டம் மீண்டும் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது அணிக்கான புள்ளிகளைப் பெறுவதற்காகப் போராடினர். கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 3புள்ளிகளையும், யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 5புள்ளிகளையும் பெற்றன. இதில் கொக்குவில் இந்து சார்பில் தமிழரசி 3புள்ளிகளையும் யாழ்.இந்து மகளிர் சார்பில் டயானா, சர்மிளா ஆகியோர் 2புள்ளிகளையும், சபர்னா ஒரு புள்ளியையும் பெற்றனர். இரண்டாம் கால்பாதியில் யாழ் .இந்து மகளிர் 13புள்ளிகளையும், கொக்குவில் இந்து 13 புள்ளிகளையும் பெற்றனபட்டன. இதில் யாழ்.இந்து மகளிர் சார்பில் சானுஷா 5, சர்மிலா 4, டயானா, சுபர்னா ஆகியோர் தலா 2புள்ளிகளையும், கொக்குவில் இந்து சார்பில் தமிழரசி 8, தர்சிகா 3, சிவானி 2 புள்ளிகளையும் பெற்றனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 18 புள்ளிகளையும், கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 16 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

மூன்றாம் கால்பாதியில் கொக்குவில் இந்து 3புள்ளிகளையும் யாழ்.இந்து மகளிர் 5புள்ளிகளையும் பெற்றன. இதில் கொக்குவில் இந்து சார்பில் கஸ்தூரி 2, சனுஷா ஒரு புள்ளியையும், யாழ். இந்து மகளிர் சார்பில் டயானா 4, சர்மிலா ஒரு புள்ளியையும் பெற்றனர். இறுதி கால்பாதி ஆட்டத்தின் போது கொக்குவில் இந்துக் கல்லூரி அணி புள்ளிகளைப் பெறவில்லை. யாழ்.இந்து மகளிர் சார்பில் டயானா 4, சுவர்னா 2 புள்ளிகளையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். ஆட்ட முடிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 29:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ரி- 23)



# ஹொக்கி அணி தெரிவுக்கான பயிற்சிகள்




தேசிய சிரேஷ்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டிகளுக்கு யாழ். மாவட்ட அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி முதல் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்டத்தில் உள்ள கழகங்கள் மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த வீரர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத் தலைவர் எம். இளம்பிறையன் அறிவித்துள்ளார். (ரி-108)

# அஞ்சல் ஓட்ட காணிவேல் நிகழ்வு ஒத்திவைப்பு

கரணவாய்,ஒக்.26
யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்படவுள்ள அஞ்சலோட்ட காணிவேல் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறும் என யாழ்.மாவட்ட மெய்வன்மை சங்கத் தலைவர் எம்.இளம்பிறையன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தால் யாழ்.மாவட்டத்தில் 14 வயது,16 வயது, 18 வயது கழகங்களுக்கிடையிலும் முதல் முதலாக அஞ்சலோட்ட காணிவேல் நிகழ்வு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தால் 8 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் பாடசாலைகள் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்பாக சங்கச் செயலாளர் எஸ். சுகிர்தனிடம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ரி-108)

# விண்ணப்ப திகதி நீடிப்பு

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தால் நடத்தப்படவுள்ள தொழில்நுட்ப அலுவலர் தரம் 4 இற்கான பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மெய்வன்மைச்சங்க நடுவர் சங்கத் தலைவர் எம்.இளம்பிறையன் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி கடந்த 24ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. இப் பரீட்சைக்குப் போதிய விண்ணப்பங்கள் கிடைக்காத காரணத்தால் விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் மெய்வன்மை நடுவர் சங்கத்தில் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அவர் அறிவித்துள்ளார்.

# அரையிறுதியில் யாழ்.4 ஸ்ரார்

கரணவாய்,ஒக்.26
அல்வாய் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை 4 இலக்குகளால் வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது யாழ்.4 ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 6 பேர் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் நேற்று இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் யாழ்.4 ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், அல்வாய் கலை மகள் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.4 ஸ்ரார் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அல்வாய் கலைமகள் விளையாட்டுக் கழகம் 5 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக சுலோகன் மூன்று 6 ஓட்டங்கள் அடங்கலாக 29 ஓட்டங்களையும், கிரி இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் ஒரு இலக்கை கைப்பற்றினார்.

இதனை அடுத்து 53 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்.4 ஸ்ரார் அணி 4 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மட்டும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்குகளால் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அந்த அணி சார்பாக டர்வின் மூன்று 6 ஓட்டங்கள் அடங்கலாக 27 ஓட்டங்களையும், ஹெறிக் 13 ஓட்டங்களையும் பெற்றனர் பந்து வீச்சில் சுலோசன் ஒரு இலக்கைக் கைப்பற்றினார். (ரி-108)

# இறுதியாட்டமும் கௌரவிப்பு நிகழ்வும்

விசுவமடு தோழர்கள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்களுக்கான கௌரவிப்புநிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசுவமடு மகாவித்தியாலய பழைய மாணவர்களின் அனுசரணையுடன் இடம் பெறும் இந்த நிகழ்வுக்கு தோழர்கள் விளையாட்டுக் கழகத் தலைவர் கிருபாகரன் தலைமை தாங்கவுள்ளார். நடைபெறும் இறுதியாட்டத்தில் முல்லை சென்யூட் அணியும், விசுவமடு பாரதி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (ரி)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஒக்.26
கொக்குவில் இந்துக்கல்லூரி இரண்டாவது வருடமாக நடத்தும் கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 18 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.26
விளையாட்டுத்துறை அமைச்சும், விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து நடத்தும் 40 ஆவது தேசியமட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை அனுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் வடமாகாண உதைபந்தாட்ட அணியை எதிர்த்து தென்மாகாண உதைபந்தாட்ட அணி மோதவுள்ளது. (ரி- 23)

# இரண்டாவது பாதியில் அசத்தல்; அடுத்த சுற்றுக்கு சென். மேரிஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.26
முதல் பாதியில் பிரகாசிக்கத் தவறி இரண்டாவது பாதி யில் ஜொலித்த நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி, குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் சென்.மைக்கல் வெற்றிக் கிண்ணத்துக்கான, அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான நிலையில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் யக்சன் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். பதிலுக்கு குருநகர் பாடும்மீன் அணி வீரர் மலிக் தனது அணிக்கான கோலை அடித்தார். இதனால் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது இரு அணியினரும் ஆட்டத்தின் வேகத்தினை அதிகரித்து தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்டனர். இதன்போது நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் யக்சன் தனக்கு கிடைத்த பந்தினை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்காக மீண்டும் கோலினை அடித்தார். இதன் போது குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வீரர்களான திலிப், றொக்சன், ஜீவன் ஆகியோர் அடுத்தடுத்து தமது அணிக்கு கோல்களை அடித்தனர். ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கியதால் பரபரப்பான கட்டத்தை அடைந்தது. இரண்டாம்பாதி ஆட்டம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியின் ஆதிக்கத்தில் இருந்தது. குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி தமக்கு கிடைத்த கோல்பெறும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக வீரர்களான ஜெனட், யூட் ஆகியோர் தலா 2 கோல்களையும், நிரேசன், தங்கன் ஆகியோர் ஒவ்வொரு கோலையும் தமது அணி சார்பாக அடித்தனர். ஆட்ட முடிவில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 8:4 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (ரி- 23)

# முதலிடத்தில் முரளி




இந்தியா, இலங்கை ஆட்டங்களில் அதிக இலக்குகள் எடுத்தவர்கள் வரிசையில் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் முதலிடத்தில் உள்ளார்.

இந்தியாவுடன் 63 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள முரளிதரன் 74 இந்திய இலக்குகளை வீழ்த்தியுள்ளார். 30 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 7 இலக்குகளை வீழ்த்தியது இவரது சிறந்த பந்து வீச்சாகும். இவருக்கு அடுத்த இடத்தில் இலங்கை அணியின் சமிந்த வாஸ் 61 ஆட்டங்களில் விளையாடி 70 இலக்குகளை எடுத்துள்ளார். இவரது சிறந்து பந்து வீச்சு 14 ஓட்டங்களுக்கு 5 இலக்குகள் எடுத்ததாகும். இந்தியா வின் சகீர்கான் 66 இலக்குகளும், ஹர்பஜன் சிங் 61 இலக்குகளும், அஜித் அகர்கர் 49 இலக்குகளும் கைப்பற்றி அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

(ரி)

# மும்பையை நோகடித்தது நோர்த் ஈஸ்ற்




நேற்றுமுன்தினம் மும்பையில் நடந்த 11ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை எப்.சி. அணி, நோர்த் ஈஸ்ற் யுனைற்றட் அணிகள் மோதின. விறுவிறுப்பாக தொடங்கிய ஆட்டத்தில் முதல் பாதியில் மும்பை ஆதிக்கம் செலுத்திய போதிலும் கோல் ஏதும் அடிக்க முடியவில்லை. பிற்பாதியில் நோர்த் ஈஸ்ற் அணியினரின் கை ஓங்கியது. 57ஆவது நிமிடத்தில் கோகே தட்டிக்கொடுத்த பந்தை கோன்ட்வானி டோங்கா கோலாக்கி, மும்பை ரசிகர்களை அதிர்ச்சியில் உறைய வைத்தார். பதிலடி கொடுக்க முயன்ற மும்பை அணிக்கு அடுத்தடுத்து பேரிடி விழுந்தது. 72ஆவது நிமிடத்தில் மும்பையின் முன்னணி வீரர் பிரெட்ரிக் லுங்க்பெர்க் தசைப்பிடிப்பால் வெளியேறினார். ஆனால் ஏற்கனவே மாற்று வீரர்களை பயன்படுத்தி விட்டதால் அவருக்கு பதிலாக வேறு வீரரை இறக்க முடியவில்லை. 75ஆவது நிமிடத்தில் 2ஆவது முறையாக மஞ்சள் அட்டை காட்டப்பட்ட பவெல் சிமோவ்சும் வெளியே அனுப்பப்பட்டார். இதன் காரணமாக இறுதிக் கட்டத்தில் 9 வீரர்களுடன் ஆட வேண்டிய நெருக்கடிக்கு மும்பை அணி தள்ளப்பட்டது. இதனை சாதகமாகப் பயன்படுத்தி கடைசி நிமிடத்தில் நோர்த் ஈஸ்ற் அணி மேலும் ஒரு கோல் போட்டது. இந்த கோலை பெலிப் டீ காஸ்ட்ரோ அடித்தார். ஆட்டநேர முடிவில் நோர்த் ஈஸ்ற் யுனைற்றட் அணி 2:0 என்ற கோல் கணக்கில் மும்பையை தோற்கடித்தது. 4ஆவது ஆட்டத்தில் ஆடிய நோர்த் ஈஸ்ற் அணிக்கு இது 2ஆவது வெற்றியாகும். 3ஆவது ஆட்டத்தில் விளையாடிய மும்பை அணிக்கு இது 2ஆவது தோல்வியாகும்.

(ரி)

# சாமுவேல்ஸ் எதிர்ப்பு



இந்தியப் பயணத்தை பாதியில் ரத்து செய்துவிட்டு நாடு திரும்பியதற்கு மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னணி வீரர் சாமுவேல்ஸ் தனது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளார்.

5 ஒருநாள் ஆட்டங்கள், ஒரு 20 ஓவர் ஆட்டம் மற்றும் 3 டெஸ்டில் விளையாட அந்த அணி திட்டமிட்டு இருந்தது. ஆனால் 4ஆவது ஒரு நாள் ஆட்டத்தோடு சம்பளப் பிரச்சினையைக் காரணம் காட்டி மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள் தொடரை பாதியில் ரத்து இடைநிறுத்தினர். இதனால் அதிர்ச்சியடைந்த இந்திய கிரிக்கெட் சபை அந்த அணியுடனான நேரடி ஆட்டங்களுக்கு தடை விதித்தது.

இந்த நிலையில் இது தொடர்பாக சாமுவேல்ஸ் கூறியதாவது:-

இந்தியப் பயணத்தை பாதியில் இடைநிறுத்துவதை நான் விரும்பவில்லை. வீரர்களின் சங்க தலைவர் வாவல் ஹின்ட்ஸ் கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தையை முடிக்கவில்லை. எனவே நாம் தொடர்ந்து விளையாடலாம் என்று வலியுறுத்தினேன். சுற்றுப்பயணத்தை முடித்த பிறகு நாம் பிரச்சினையை கிளப்பலாம் என்றேன். தமது அணியின் கிரிக்கெட் தான் நமக்கு முக்கியம். இந்திய தொடரைப் பாதியில் இடைநிறுத்தியது சரியான முடிவு கிடையாது என்று அவர் கூறியுள்ளார்.

(ரி)

# சிக்கலில் மெய்யப்பன்

ஐ.பி.எல். சூதாட்டம் தொடர்பான வழக்கில் சென்னை அணியின் முன்னாள் உரிமையாளரான குருநாத் மெய்யப்பனின் குரல் மாதிரிகள் உண்மையானவை தான் என உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் இந்த விடயத்தில் குருநாத் மீதான பிடி மேலும் இறுகியுள்ளது.

ஆறாவது ஐ.பி.எல். தொடரில் நடந்த சூதாட்டம் குறித்து உச்ச நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வருகிறது. இந்த சூதாட்டம் தொடர்பாக ஐ.சி.சி.யின் தலைவர் சீனிவாசனின் உறவினரான குருநாத் மெய்யப்பன் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டார். அவர் மீது சென்னை அணி தொடர்பான தகவல்களை, சூதாட்டக்காரர்களுக்கு தெரிவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டது. இந்த நிலையில் இந்தி நடிகர் விண்டூ தாராசிங்குடன் சூதாட்டம் குறித்து தொலைபேசியில் இவர் பேசிய பேச்சுக்கள் அடங்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அதில் குருநாத், தாராசிங் மற்றும் சூதாட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களின் குரல் மாதிரிகள் உண்மை தான் என உறுதி செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும், சூதாட்ட விடயத்தில் குருநாத் மீதான பிடி மேலும் இறுகியுள்ளது என்றும் எதிர்வரும் 30ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் நீதிபதி முத்கல் குழு சமர்ப்பிக்கும் இறுதி அறிக்கையில் இத்தகவல்கள் இடம்பெறலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ரி)




# கோபக்கார கோஹ்லி

இந்திய துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி கோபக்கார இளைஞர் என்று யுவராஜ் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு எதிரான முதல் மூன்று ஒரு நாள் ஆட்டங்களுக்கு இந்திய அணித் தலைவர் டோனிக்கு ஓய்வு அளிக்கப்பட்டு விராட் கோஹ்லி அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இதுபற்றி கருத்து தெரிவித்த இந்திய வீரர் யுவராஜ் சிங், விராட் கோஹ்லி ஒரு கோபக்கார இளைஞர். அதிலும் அணித் தலைவராக செயற்பட்டு அணி தோல்வி அடையும் போது மேலும் ஆக்ரோஷமாகி விடுவார். மேலும், அவரிடம் நிறைய திறமை உண்டு என்பதை நான் அறிவேன் என்றும் கடினமாக உழைப்பதிலும் போட்டியில் கவனம் செலுத்துவதிலும் அற்புதமான வீரர் அவர் எனவும் தெரிவித்துள்ளார். (ரி)



# இரு ஆட்டங்கள் 459 ஓட்டங்கள்

கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக அடுத்து 2 ஆட்டங்களில் மொத்தம் 459 ஓட்டங்களை குவித்து சாதனை படைத்துள்ளார் ஆதித்யா கர்வால்.

குஜராத்தை சேர்ந்த 18 வயதான ஆதித்யா கர்வால், 19 வயதுக்கு உட்பட்டோருக்கான வினோ மேன்கட் கிண்ணப் போட்டியின் போது இந்த சாதனையை நிகழ்த்தினார். தொடர்ச்சியாக இரு 50 ஓவர் ஆட்டங்களில் விளையாடிய ஆதித்யா, ரயில்வே அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் 151 பந்துகளில் 18 சிக்ஸர்கள், 22 பவுண்டரிகள் அடங்கலாக 263 ஓட்டங்களையும், மத்திய பிரதேச அணிக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் 137 பந்துகளில் 7 சிக்ஸர், 19 பவுண்டரிகள் அடங்கலாக 196 ஓட்டங்களையும் விளாசினார். இதன் மூலம் 2 ஆட்டங்களில் 459 ஓட்டங்களை குவித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இவரது சாதனையை அறிந்த இந்திய அணியின் அதிரடித் தொடக்க வீரர் சேவாக் ஆதித்யாவின் சாதனையை பற்றி டுவிட்டரில் வியந்து பாராட்டியுள்ளார்.

(ரி)

மாபெரும் அதி விசேட தள்ளுபடி
வீடு மற்றும் அலுவலக தளபாடங்கள் 40% வரையிலான விலைக்குறைப்புடன்
Sofa 40400/= 32320/= (10 வருட உத்தரவாதம்)
கண்ணாடி அலுமாரி 13750/= 8950/=
கண்ணாடி சாப்பாட்டு மேசை 23560/= 18125/=
மெத்தை 3620/= 2170/= (2 வருட உத்தரவாதம்)
மரக்கட்டில் 8250/= 5900/=
பிளாஸ்டிக் கதிரை 900/= 630/=
TV Stand 4280/= 2990/=
230, நாவலர் றோட் (இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
(C/17234)(10.6.3) 077 35 83 879, 077 83 14 201

## இடி தாக்கியதில் ஆலய கோபுரம் சேதமானது

யாழ்ப்பாணம், ஒக். 26

கே.கே.எஸ் வீதி கோண்டாவிலில் உள்ள பிள்ளையார் ஆலயம் மணிக்கூட்டுக் கோபுரத்தில் நேற்றுப் பிற்பகல் இடிவிழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதனால் கோபுரமும் கூரை ஓடுகளும் பிள்ளையார் சிலையும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் பல இடங்களிலும் கன மழை கொட்டித்தீர்த்தது. இதன்போதே இந்த ஆலயத்தில் இடி தாக்கி இவ்வாறு சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(த-4)

FALC FRENCH LANGUAGE CENTRE REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French.. 850 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
நவீன முறையிலான நடைமுறைக் கல்வி Audio, Video மூலம் & A/C வகுப்பறைகள்
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரையாளர் மேற் கொண்டவர்)
Note: போலி ஆசிரியர்களிடம் சென்று ஏமாறாதீர்கள்..
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி.
ஆரம்பம்:01.11.14 Sat 8.00am, No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்:01.11 Sat 4.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி
021 320 2973 0779 789 456

அன்பின் அரவணைப்பு அறிமுகமாகும் இருப்பிடம்
Nation popular travels & tours



மிகக்குறைந்த விமானக் கட்டணங்கள்
அனைத்து பயண ஒழுங்கமைப்புகளுக்கு வீட்டிலிருந்தவாறே உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய இடம்
Mobile: 0773083820
யாழ்ப்பாணம் 0214920920 | வவுனியா 0244930830 | கொழும்பு 0114651199
www.nationtravels.com

நர்சிங் / குழு வகுப்புக்கள் கணக்கீடு / வணிகக்கல்வி
A/L 2015, A/L 2016 & Day Batch, AAT, Banking Classes (10)
Mobile: 0755287808, 075 077 5660

A/L Day Class
வர்த்தகப்பிரிவு ஆரம்பம்
பொருளியல்-உதயன்
கணக்கீடு-பகிரதன்
வணிகக்கல்வி-பிரபல ஆசிரியர்
8.00 am - 2.00 pm
எங்கு? -Economics Hall நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
எப்போது?

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கண்ணகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம். (உரும்பிராய் சந்திக்கு அருகில்) (58509)(4.3.6)
T.P: 072 681 6681, 072 681 6691

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

ஹோட்டல் உரிமையாளர்களே!
இலகுவான, விரைவான வேலைக்கு !! உணவுகளை அவிக்கும் இயந்திரம்
RICE STEAMER
பல வகையான உணவிற்கு..
அரிசி மா, இடியப்பம், மரக்கறி, மீன், இறைச்சி, ஆவியைப்பிடிப்பு, மற்றும் பல வகையான உணவுகளை இலகுவாகவும் விரைவாகவும் அவிக்கக்கூடியது



தமிழில் தொடர்பு கொள்ள 077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

கடை வாடகைக்கு
சிவலிங்கப்புளியடிக்கும் தட்டா தெருச்சந்திக்கும் இடையில் கடை வாடகைக்குண்டு. காட்சியறைக்கு உகந்தது.
(53185)(12.5.6) தொடர்பு: 075 923 7546

வெளிவாரிப்பட்டப்படிப்பு
கொழும்பு பல்கலைக்கழகம்
விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. •தொழில் தேடுவோர் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தோர் பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடுகளில் தொழில் தேடுவோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரசவேலையிலும், மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக் குறைந்த கல்வித் தகைமை க.பொ.த சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 28 ஒக்டோபர். புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் பெயர் விபரங்களை 772395895 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு sms செய்யவும். மேலதிக விபரங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Lava Hospitals
UNIQUE DENTAL CARE A Multi Disciplinary Dental Care
அனைத்து வகையான பல் வைத்திய சேவைக்கும்
Weekday 4.00p.m -8.00 p.m
Weekends 9.00a.m-8.00 p.m
361, பலாலி றோட், திருநெல்வேலி.
(53444)(6.4.3) (பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில்) 021 221 2599

வேலைவாய்ப்பு
Bussiness Development Officer (05)
தேவை. சுயவிபரக் கோவைகளை (CV)
Jobs@innovoy.com இற்கு அனுப்பவும்.
(53478)(12.3.6) தொடர்பு: 021 221 7095

அமெரிக்க லொத்தர் விசா- V2 Travels
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
இன்னும் ஒருசில தினங்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
18 வயதிற்கு மேற்பட்ட யாவரும் விண்ணப்பிக்கலாம்
கிளிநொச்சி 0771516537 | யாழ்ப்பாணம் 0773867257 | நெல்லியடி 0776699892 | கல்முனை/மட்டக்களப்பு 0776697960

AFTER G.C.E. O/L STUDY IN UK
SPOT ADMISSION Venue : Jaffna Branch Date : 2014.10.27
STAGE 4 FINAL YEAR DEGREE
STAGE 3 SECOND YEAR DEGREE
STAGE 2 FIRST YEAR DEGREE
STAGE 1 UNIVERSITY FOUNDATION
G.C.E. O/L
2013 - 2014(Mar) வரை வெற்றிகரமாக UK பயணமான மாணவர்களில் சிலர்




G.C.E O/L உடன்.....
G.C.E O/L சித்தியுடன் UK இன் உயர் கல்லூரி / பல்கலைக்கழகத்தில் இணைந்து 4 வருடங்களில் நீங்கள் விரும்பிய துறையில் பட்டதாரியாகும் கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும்!
நீங்கள் ஏன் Exponet இனை தெரிவுசெய்ய வேண்டும்
▶ எமது நிறுவனம் எண்பதிற்கு மேற்பட்ட முன்னிலை வகிக்கின்ற கல்லூரிகள், பல்கலைக்கழகங்களிற்கு மிகத் தெளிவான ஆலோசனைகளையும், பகுதி நேர வேலை வாய்ப்புக்களுடன் கூடிய விசாக்களையும் பெற்றுக்கொடுக்கின்றது
▶ நீங்கள் தெரிவு செய்யும் கல்லூரியாயின் 2-3 வருடகாலமும், பல்கலைக்கழகம் ஆயின் குறைந்தது 4 வருட விசாவினையும் பெற்றுக்கொள்ள முடியும்
▶ எம்மிடம் Student Visa அனுமதிக்காக இணைவோருக்கு IELTS வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது
▶ Student Visa தொடர்பான வழிகாட்டலில் யாழ் மாணவர்களின் அதிஉயர் நம்பிக்கையை பெற்ற எமது நிறுவனத்துடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்
EXPONET Overseas Consultants www.expogroup.lk
No. 379-1/2 Galle Road, Col -06.
Hotline: 011 7555511/14/18
E-mail: nimal@expogroup.lk
# 197, Arasady Road, Jaffna.
021 7538395 / 021 2227230

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்
சவுதி இராச்சியத்தில்
முன்னணிக் கம்பனியில் உடனடி வேலைவாய்ப்புக்கள்



இலங்கை சாதாரண வாகன அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள்
சாரதி தொகை 50
சம்பளம் (ரியால்) உணவு கொடுப்பனவு 1000 + 200
சம்பளம் (ரூபா) உணவு கொடுப்பனவு 35,000 + 7000
வயது (21 - 40 வரை)
★ ஒப்பந்த காலம் 3 வருடங்கள் தங்குமிடம், போக்குவரத்து மற்றும் வைத்திய வசதி இலவசம்
★ ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் *கிழமைக்கு 6 நாள்கள்
★ காப்புறுதி மற்றும் அனைத்து நிபந்தனைகளும் சவுதி இராச்சியத்தில் தொழிலாளர் சட்டத்திற்கு இணங்க வழங்கப்படும்.
★ ஒப்பந்தகால முடிவில் விமான பயணம் இலவசம் (சாப்பாட்டுக் கட்டணம் 200 ரியால் வழங்கப்படும்)
தகுதி பெற்றவர்கள் கடவுச்சீட்டோடு உடனடியாக சமுகமளிக்கவும்.
ஞாயிற்றுக்கிழமை மற்றும் போயா தினங்களில் காலை 10.30 மணியிலிருந்து 3.00 மணிவரை திறந்திருக்கும்
அரபியன் கல்ப் என்டபிரைசஸ்
S.E.G.F.E. Reg. No. 969
இல. 72/26, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10
தொழில் நுட்பக்கல்லூரியின் சந்தியிலிருந்து பஞ்சிகாவத்தை பக்கத்திற்கு மெடி ஹவுஸ் கட்டடத்தைக் கடந்து 50 மீற்றர் தொலைவில் உள்ளது.
Hot Line - Sharma : 077 255 8311 / Miskin : 0717 265 000

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.